for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கேரீஸ்

இளைஞர் மாத இதழ்

# ஊழியக் களத்தில் பரிசுத்தம் காண்போம்!



களத்தில் 2026 வீரியம்

Vol 35-Issue 2 - February- 2026

Private circulation only

# கிறிஸ்து தீர்க்கதரிசிகளிலும் மேலானவர்

பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பது என்பது கிறிஸ்து பெற்றுக் கொண்ட மாட்சிமையையும், அதிகாரத்தையும் குறிப்பிடுகிறது (எபே. 1:20-23). பரலோகத்தின் மிகவும் கனத்துக்குரிய ஆசனம் இதுதான். ஆகவேதான் கிறிஸ்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை விட உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். ஏனென்றால் இவர் இறைவனின் தூதர் மட்டுமல்ல, கடவுளின் குமாரனாக அவதரித்தவர். இது எபிரெய புத்தகத்தின் ஒரு மையக்கருப்பொருளாகும்.

தீர்க்கதரிசிகள் கடவுளுக்காகப் பேசினார்கள். அவர்கள் பெற்ற செய்தியை வழங்கினார்கள். ஆனால் இயேசு கடவுளாகப் பேசினார். இவர் தேவனுடைய குமாரன். குமாரனுடைய வருகைக்குப் பின் பழைய உடன்படிக்கையின் முறைகள் முடிவுக்கு வந்துவிட்டன. கிறிஸ்துவே தேவனுடைய இறுதியும், முழுமையான வெளிப்பாடாகவும், இரட்சிப்பின் ஒரே வழியாகவும் இருக்கிறார்.

### 1. கிறிஸ்துவின் மேன்மை – *The Exaltation of Christ:*

தேவனுடைய வார்த்தையை (*The Word of God*) தீர்க்கர்கள் "இப்படியாகக் கர்த்தர் சொல்லுகிறார்" என்று தேவனுடைய வார்த்தையை அறிவித்தார்கள். ஆனால் இயேசுவே தேவனுடைய வார்த்தை. அதாவது அவர் தேவன்.

**குமாரன் (Son):**

தீர்க்கதரிசிகள் ஊழியக்காரர்கள், ஆனால் இயேசுவே தேவனுடைய குமாரன், தேவனுக்குச் சமமானவர். தேவனுக்குச் சமமானவரைத் துதியுங்கள்.

**படைத்தவர் (Creator):**

தீர்க்கதரிசிகள் படைக்கப்பட்டவர்கள், ஆனால் இயேசுவே அனைத்தையும் படைத்தவர். அகில உலகத்தைப் படைத்தவரைத் துதியுங்கள்.

### 2. தேவன் மனிதனோடு பேசிய விதம் – *The Ways God Spoke to People:*

தேவன் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் (*Many times and various ways*) பேசினார். பற்பல முறைகளிலும், பல்வேறு வகைகளிலும், தரிசனங்கள் மூலமாகவும், கனவுகள் மூலமாகவும், சம்பவங்கள் மூலமாகவும் பேசினார். சர்வ வல்லமையுள்ள தேவன் தான் விரும்பியிருந்தால் தன்னைக் குறித்தும், தன் குமாரனைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும், மனித வீழ்ச்சியைக் குறித்தும், அவருடைய இரட்சிப்பைக் குறித்தும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தி இருக்கலாம். ஆனால் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் பல்வேறு கால கட்டங்களில் அவற்றை அறிவிப்பது தேவனுக்குப் பிரியமாயிருந்தது.

*The Different between the two:*

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| எப்போது பேசினார் | பூர்வ காலம் | கடைசி காலம் |
| எவ்வாறு பேசினார் | பங்கு பங்காக, வகை வகையாக | பூரண வெளிப்பாடாக |
| யாரோடு பேசினார் | பிதாக்களிடம் | நம்மிடம் |
| யார் மூலமாகப் பேசினார் | தீர்க்கதரிசிகள் மூலம் | குமாரன் மூலமாக |

### 3. கிறிஸ்து பிதாவாகிய தேவனுடைய மகிமை – *Radiance of God's Glory:*

கிறிஸ்து அவருடைய மகிமையின் பிரகாசமும், தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தால் தாங்குகின்றார். பிதாவின் மகிமையை யாராலும் காண முடியாது (யாத். 33:18-20). அப்படிப்பட்ட தேவனை பாவ மனிதன் கண்டுகொள்ளக் கூடிய விதத்தில் குமாரனாகிய இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக வெளிப்பட்டார் (மத். 9:6; மத்: 12:8, 40).

### 4. கிறிஸ்து சர்வத்துக்கும் சுதந்திரவாளி – *Heir of all things:*

குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைச் சர்வத்திற்கும் சுதந்திரவாளியாக (*Heir of all things*) நியமித்தார். அதாவது சகலத்திற்கும் உரிமையாளராக நியமித்தார் (ரோமர் 8:17). ஒரு தகப்பனின் மரணத்திற்குப் பின் தான் அவரின் சொத்துக்கு அவருடைய குமாரன் சுதந்திரவாளியாக மாற முடியும். ஆனால் இங்கு தேவன் நித்தியமானவர். ஒருபோதும் மரிப்பதில்லை. ஆனால் தேவன் தம் குமாரனைக் கனம் பண்ண அவரைத் தன் சொந்த வாரிசாக அறிவித்தார். ஏனென்றால் அவரே இந்த உலகத்தை உண்டாக்கினார் (சங். 2:7, 8). ஆகவே கிறிஸ்துவே தேவனுடைய இறுதியும், முழுமையான வெளிப்பாடாகவும் இருக்கிறார்.

- ✦ அவர் வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைக்காக அவரைத் துதியுங்கள்!
- ✦ ஆதிமுதல் பிதாவோடு இருந்தவராகிய குமாரனைத் துதியுங்கள்!
- ✦ இந்த கடைசிக் காலத்தில் குமாரன் மூலமாகவே பேசுபவரைத் துதியுங்கள்!
- ✦ சர்வத்தையும் தன் வசனத்தால் தாங்குகிறவராகிய குமாரனைத் துதியுங்கள்
- ✦ ஒரேபேறான குமாரனை நமக்காக வெளிப்படுத்தினவரைத் துதியுங்கள்!

*கர்த்தருடைய கிருபையும் சமாதானமும் உங்களை நிரப்புவதாக. ஆமென்!*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - Divider - 5
விவாதக்களம் - விசுவாசப் பிரமாணம்
தெரியுமா? தெரியாதா? - 7 & 8
அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்! - 9
தூக்கமின்மை நோய் - 12
Dating Fatigue - 14
உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? - 15
Build on the Right Foundation - 20
கனம் பெற்ற மொர்தெகாய் - 22


# ஊழியக் களத்தில் பரிசுத்தம் காண்போம்

பரிசுத்தமுள்ளவரும், பரிசுத்தத்திற்கென்று அழைத்தவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேரீத் பத்திரிக்கையை வாசிக்கிற வாலிபர்கள் அனைவருக்கும் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

**“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.”** (1 பேதுரு 1:15)

கர்த்தர் பரிசுத்தமுள்ளவர், அதனால் அவருடைய மக்களும் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை இந்த வசனத்தின் மூலம் பேதுரு கூறுகிறார். ஏனென்றால் பரிசுத்தம் என்பது இவ்வுலகில் காணப்படும் பாவத்தை விட்டுவிட்டு கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவரை ஆராதிக்கும் ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதாகும். ஆனால் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று சொல்லியும், நாம் ஏன் பாவத்தில் விழுந்து எழுந்திருக்கிறோம்? ஏனென்றால் இரட்சிக்கப்படும்போது நாம் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலை பெறுகிறோம். பாவத்தின் பிரசன்னத்திலிருந்து விடுதலை என்பது கிறிஸ்துவோடு வாழும் எதிர்கால வாழ்க்கையாகும். இப்போது நாம் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நாம் பாவ சோதனையின் வழியாகவும், பாவம் செய்யக் கூடியதான சூழ்நிலை வழியாகவும் கடந்து வந்தாலும் பரிசுத்த ஆவியானவரின் துணையைக் கொண்டு பாவத்தை மேற்கொள்ள முடியும் (1 யோவான்2:1; 3:6).

வாலிப நாட்களில் பல பாவ வழிகளில் நடந்து, கள்ள உபதேசங்களைக் கேட்டு, இயேசுவை விட்டு தூரம் சென்று வாழ்ந்தவர் அகஸ்டின். ஒரு நாள் பூங்கா ஒன்றில் தனிமையாக பல மன குழப்பங்களோடு உட்கார்ந்திருக்கும்போது ரோமர் 13:12ஆம் வசனத்தை “எடுத்து வாசி” என்ற சத்தத்தைக் கேட்டு வேதத்தை திறந்து படித்தார். உடனே, அவர் தன் வாழ்க்கையில் செய்த தவறுகளை அறிக்கையிட்டு இயேசுவிடம் மனந்திரும்பினார். பின்னர், அவர் அநேக பாவிகளைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருகிற பரிசுத்த அகஸ்டினாக மாறினார். அவருடைய பாவ அறிக்கையில் அவர் சொன்னது: “இயேசுவே உம்மை நான் புரிந்துக் கொண்டு அன்பு செய்வதற்கு எவ்வளவு பின்தங்கி விட்டேன். நீர் எனக்குள் இருந்தீர், ஆனால் நானோ வெளி உலகத்தில் அலைந்து திரிந்துக் கொண்டிருந்தேன். நீர் என்னோடு இருக்க, நான் உம்மோடு இல்லாதிருந்தேன். இப்போது உம் மீது மட்டுமே எனக்கு பசியும், தாகமும் உள்ளது. நீர் தரும் உண்மையான அமைதிக்காக நான் ஏங்கி நிற்கிறேன்.”

வாலிபர்களாகிய நீங்கள் எத்தனை பேர் இயேசுவின் அன்பை விட்டுவிட்டு, ஏதோ ஒருவருடைய அன்புக்காக ஏங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், உங்களை சற்று ஆராய்ந்துப் பாருங்கள். “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக” (மத். 22:37) என்ற வசனத்தின்படி இயேசு உன்னை அவரோடு நெருங்கி வாழ்ந்து பாவத்தை விட்டு முற்றிலும் அவருக்காக பரிசுத்தமாய் வாழ அழைக்கிறார். நீ வாழும் இடம், படிக்கும் இடம் மற்றும் வேலை பார்க்கும் இடமே உன்னுடைய ஊழியக்களமாகும். இந்த ஊழிய களத்தில் பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழ உன்னை ஒப்புக் கொடுப்பாயா (ரோமர் 12:1). ஒப்புக்கொடுக்கிற உன்னை பரிசுத்தமுள்ள கர்த்தர் பரிசுத்தப்படுத்துவார்.

“பரிசுத்தமற்ற உலகிலிருந்து, பரிசுத்தமற்ற ஒரு மனிதனை கடவுள் எடுத்து, அவனை பரிசுத்தமாக்கி, மறுபடியும் இந்த பரிசுத்தமற்ற உலகில் வைத்து, பரிசுத்தமாய் காக்கிறாரே அதுதான் அற்புதங்களில் எல்லாம் அற்புதம்.” – லியோனார்டு ரேவன்ஹில்

ஜனவரி மாதத்தில் நடந்த வாலிபர் முகாம்கள் சிறப்பாக நடைபெற கர்த்தர் உதவிச் செய்தார். இதற்காக பாரத்தோடு ஜெபித்து, உழைத்து, செயல்பட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதத்தில் லெந்து நாட்கள் ஆரம்பிப்பதால் வாலிபர்கள் உங்கள் பகுதியில் ஒரு மணி நேரமோ அல்லது மூன்று மணி நேரமோ உபவாசமிருந்து குழுவாக தேசத்திற்காகவும், மிஷனெரி பணிக்காகவும் ஜெபியுங்கள். நீங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்கு இந்நாட்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

தேவக் கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*



## தகப்பனின் ஆசீர்வாதமும் தலைவனின் தரிசனமும்

# கொடுமையின் கருவி சிமியோன்

REV. DANIEL GNANAPRAGASAM



யாக்கோபு இறப்பதற்கு முன்பு தன் 12 மகன்களையும் அழைத்து ஆசீர்வதித்தார். இந்த ஆசீர்வாதமானது அவர்களின் தனிப்பட்ட குணநலன்கள் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில், எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்கதரிசன அறிவிப்புகளாக அமைந்தது. தகப்பனுடைய ஆசீர்வாதங்களோடு சிலர் பாராட்டுகளையும், சிலர் கடிந்து கொள்ளுதலையும் பெற்றுக்கொண்டனர். தலைமகன் ரூபனைத் தொடர்ந்து சேஷ்டபுத்திர உரிமையை இழந்துபோன யாக்கோபுவின் இரண்டாவது மகனான சிமியோனைக் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

சிமியோன் என்பதற்கு "கேட்பது" என்று பொருள் அவன் தாயாகிய லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று "நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் என்று பேரிட்டாள்" (ஆதி. 29:33).

### சிமியோனின் மனநிலையும், சுபாவமும்:

தன் சகோதரியாகிய தீனாள், சீகேம் தேசத்துப் பிரபுவாகிய சீகேமால் தீட்டுப்படுத்தப்பட்டாள் என்ற செய்தியைக் கேட்டவுடன் யாக்கோபுவின் குமாரர்கள் மனங்கொதித்து மிகவும் கோபம் கொண்டார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் ஏசாவுடன் சமாதானத்தை ஏற்படுத்திக் கொண்டு "சாலேம் என்னப்பட்ட சீகேம் பட்டணத்திற்குள் அடியெடுத்துவைத்து, கடவுள் விரும்பும் சமாதான வாழ்வை வாழ விரும்பிய யாக்கோபுவிற்கு இது விரும்பத்தகாத ஒரு செய்தியாக அமைந்தது. யாக்கோபுவின் குமாரர்களின் கோபம் வஞ்சகமாக மாறியது. கடவுளின் உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனத்தை ஏமாற்றும் பொறியாக மாற்றி தங்கள் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்றனர். சிமியோனும், லேவியும் நோவெடுத்துக் கொண்டிருந்த அவர்களைத் தங்கள் பட்டயத்தால் கொலை செய்தார்கள். கடவுளின் பிள்ளைகளாக அடையாளப்படுத்தப்பட வேண்டியவர்கள் கொடுமையின் கருவிகளாக மாறி வன்முறை, ஏமாற்றுதல், பழி வாங்குதல் போன்ற அடையாளங்களாகத் தங்களை மாற்றிக் கொண்டார்கள்.

### தகப்பனின் ஆசீர்வாதமும், தீர்ப்பும்:

சிமியோன், தகப்பன் யாக்கோபுவினால் கொடுமையின் கருவியாக அடையாளப்படுத்தப்பட்டான் (ஆதி. 49:5). அவர்களுடைய உக்கிரகோபம் சபிக்கப்பட்டது. "யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன் (ஆதி. 49:7) என்று கோபவார்த்தைகள் ஆசீர்வாதத்திற்கு பதிலாக யாக்கோபுவினிடமிருந்து வந்தது. "முற்கோபி மதிகேட்டைச் செய்வான்" (நீதி. 14:17). கோபக்காரன் நிலையற்றவன். அவன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாதவன். எனவே அவனுடைய ஆலோசனைகளும் நியாயமாக இருக்காது. எனவேதான் யாக்கோபுவும், என் ஆத்துமாவே அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே, என் மேன்மையே அவர்கள் கூட்டத்தில் சேராதே என்று மற்ற கோத்திரத்தாருக்கு எச்சரிப்பாகவும் கூறுகிறார். "மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" (யாக். 1:20). நமது கோபம் பிறரைப் புண்படுத்துகிறது என்பது மட்டுமல்ல; உண்மையில் அது நம்மையே எரித்துப் போட்டு, வரவேண்டிய நன்மைகளைத் தடுத்து விடுகிறது.

### தலைவனின் தரிசனம்:

தகப்பனால் கடிந்து கொள்ளப்பட்ட சிமியோன், தலைவன் மோசேயினால் மறக்கப்பட்டான். உபா. 33இல் மோசேயின் ஆசீர்வாதக் கூறுதலில் சிமியோனுக்கு பங்கில்லை. எண். 1:23இல் மூன்றாவது பெரிய கோத்திரமாக அறியப்பட்ட சிமியோன் கோத்திரம், சுமார் 35 வருடங்களுக்குப் பின்பு (எண். 26:14) பலமிழந்து மிகச் சிறிய கோத்திரமானது (சுமார் 63% குறைந்து காணப்பட்டது).

மேலும் யோசுவாவால் கானான் தேசம் பங்கிடப்பட்டபோது சிமியோன் கோத்திரத்தாருக்கு யூதா புத்திரரின் சுதந்திரத்தின் நடுவே பங்கு கிடைத்தது (யோசுவா 19:1). சிமியோனின் மூர்க்க கோபம், யூதாவின் ஒழுங்குபடுத்தும் வழி நடத்துதலுக்குள் அடங்கிப் போனது (நியா. 1:3). நாளடைவில் அதன் பங்குகள் யூதாவிற்குள் சுருங்கிப் போனது. சீகேமின் அரண்களைத் தங்கள் அகங்காரத்தினால் நிர்மூலமாக்கிய இவர்களின் பட்டணங்கள் யூதா கோத்திரத்திற்குள் அடங்கிப் போனது. (1 நாளா. 4:27) தாவீது ராஜாவின் நாட்களில் யூதாவுடன் ஒன்றிணைந்து போனது. கி.மு. 586இல் பாபிலோனிய நாடு கடத்தலுக்குப் பின் அந்த கோத்திரம் தன் அடையாளத்தைக் காண முடியாமல், ஆதாரமில்லாமல் தொலைந்துப் போய், யாக்கோபுவின் வார்த்தை நிறைவேறியது.

### முடிவு:

சிமியோனின் வாழ்வில் மூர்க்கக் கோபம், தீமை செய்ய இரகசிய ஆலோசனை செய்தல், பழிவாங்கத் துடித்தல், நம்பவைத்து ஏமாற்றுதல், கடவுளின் உடன்படிக்கை அடையாளத்தை தவறான நோக்கத்தில் பயன்படுத்துதல் போன்ற தவறான குணாதிசயங்கள் இருந்ததைப் பார்த்தோம். புறஜாதி ஜனங்களுக்கு மத்தியில் விருத்தசேதன உடன்படிக்கையால் சேர்த்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள், கடவுளின் திட்டத்தைக் கேட்பதற்கும், பதிலளிப்பதற்கும் தெரிந்து கொள்ளப்பட்டனர். ஆனால் சிமியோனோ தன் வாழ்வைத் தவறாக பயன்படுத்தினான். இதனால் பரிசுத்த உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை (சேஷ்டபுத்திர பாகம்) இழந்து போனான். சிமியோன் கோத்திரம் வாள் (Sward) மற்றும் வாயில் (Gate) இரண்டாலும் குறிக்கப்படுகிறது. சீகேமின் மக்களை வாளால் சிமியோன் கொன்றதால் வாள் பிரபல சின்னமானது. இருப்பினும் சீகேமுக்கும், எருசலேமிற்கும் இடையிலான சாலையில் வாள் அமைந்திருந்ததால், சில நேரங்களில் வாயில் அடையாளமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிமியோனின் கொடுமையின் கருவியான வாள் கோபத்தின் விளைவினால் உண்டாகும் ஆசீர்வாத இழப்பை உணர்ந்து கொள்ளச் செய்யும் நினைவுச் சின்னங்கள் அல்லவா?

**"உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது" (நீதி. 27:4)**

இளம் வாலிபர் பகுதி - அறிவியல் களம்

# GEOMETRIC DIVIDER



MRS. JOYLINE JEROME

My dear teen Boys and Girls. Happy February month Greetings to you and your family. இந்த yearல first monthஐ ரொம்ப speedஆ முடிச்சிட்டோம். Pongal leave, republic day leaveன்னு January month ரொம்ப fastஆ போயிடுச்சி. இந்த Holidaysல நிறைய Camps எல்லாம் attend பண்ணியிருப்பீங்க. அது எல்லாம் உங்களுக்கு usefulஆ இருந்திருக்கும்னு நம்புறேன். நீங்க வாசிக்க போற அடுத்த பகுதியோட Plan, நீங்க அடிக்கடி use பண்ணுற Geometry Boxல இருக்குற things தான். அதுல January Month, நம்ம Compassஅ பத்தி படிச்சோம். அதேபோல இந்த Month, நாம படிக்க போறது Divider.

எனக்கு தெரிஞ்சு நான் School படிக்கிறப்போ, ஒரு வாட்டி கூட Dividerஐ use பண்ணினதில்லைன்னு நினைக்கிறேன். அதோட Correct usage பத்தி யாரும் சரியா Explain பண்ணல. இதுக்கு இன்னொரு reasonனும் இருக்கு, Divider பண்ணும் எல்லா taskஐயும் நாம Compassஐ வெச்சே பண்ணுறதால Dividerஐ ரொம்ப use பண்றதில்ல. ஆனா Scientificஆ அதுக்கு சில applications இருக்கு.

First of all divider ஒரு Measuring Instrument. நாம Draw பண்ணுற Projecting linesயோட distanceஅ measure பண்ணுறதுக்கு use ஆகுது. இது அதிகமா Geological Survey and map-readingல usefulஆ இருக்கும். ஆனா இப்போ யாரும் map-read பண்ணுறதில்ல. Phoneஏ அந்த வேலைய பார்க்குறதால, இந்த Skillல பத்தி யாருக்கும் தெரியாது. ஆனா, இன்னைக்கும் armyல map-reading, one of the important skills. Divider measurementஅ transfer பண்ணுற instrument. நாம scaleல measure பண்ணுற distanceஅ, graph sheetக்கோ அல்லது drawing sheetக்கோ mark பண்ணி geometric design complete பண்ணுறதுக்கு help பண்ணுது. Extraவா perpendicular bisector, angle bisector மாதிரியான geometrical constructions வரையறதுக்கு divider கண்டிப்பா தேவைப்படுது. Okay! இப்போ Dividerஐயும், Bibleஐயும் compare பண்ணி படிப்போமா?

Dividerக்கு two legs இருக்கு. ரெண்டுமே pin legs தான். இந்த pin legs தான் measure பண்ணுறதுக்கும், measure பண்ணுனதை அப்படியே வச்சிக்காம, அத transfer பண்ணுது. இதுல நாம கத்துக்க வேண்டிய முக்கியமான விஷயம் இருக்கு. நீ இயேசு கிறிஸ்துவைப் பத்தி உன் friendsக்கு எப்படி சொல்லுவ? Whats-appல status வச்சா? அல்லது Christian content இருக்கிற reels share பண்ணியா? இப்படியெல்லாம் பண்ணுறதால கிறிஸ்துவை பிறருக்கு transfer பண்ண முடியாது. Bibleல இருக்கிறபடி உன்னோட life completeஆ மாறனும். உன்னோட பேச்சு, செயல்ன்னு எல்லாத்தையும் பார்த்து உன் friend'sயே சொல்லனும் நீ மாறிட்டன்னு. இதுதான் first step. அதுக்கப்புறம், அவங்களே உன் கிட்ட கேப்பாங்க, அப்போ உன்னுடைய இயேசு கிறிஸ்துவை easyஆ அவங்க கிட்ட transfer பண்ண முடியும். நம்முடைய Parents, அவங்க காலத்துல, Christian tracks, Bible content இருக்கிற short booksன்னு எல்லாருக்கும் கொடுத்தாங்க. ஆனா அதெல்லாம் பெரிய அளவுல இந்த generationல workout ஆகாது. இந்த காலத்துல, உன்னோட lifeஅ gospelஆ transfer பண்ணுறதுக்கு showcase பண்ணு. My dear teen's இது உனக்கான choice இல்லவே இல்ல. இது Christian lifeல mandatory.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)

(நற்கிரியை - **Christian lifeல** நீ பண்ணுற செயல், சொல் மட்டுமல்ல, **actionனும்** தான்)

இப்படி உங்க friend's கிட்ட Gospel share பண்ணுன experienceஐ நீங்க எங்ககிட்ட share பண்ணுங்க. அத voice messageஆ, நம்ம Kerith Book Editor Rev. Daniel annanக்கு share பண்ணுங்க (9445040148). அது மத்தவங்களுக்கும் usefulஆ இருக்கும். நாங்களும் உங்களுக்காக ஜெபம் செய்வோம்.

Until then see you teens. Bye... Bye...

# விவாதக்களம்

நடுவர் : கோயில் குட்டி

*இன்றைய விவாதத் தலைப்பு:*

## விசுவாசப் பிரமாணம் தெரியுமா? தெரியாதா? வேணுமா? வேண்டாமா?

*பங்கு பெறும் அணியினர்*

| | | |
|---|---|---|
| ஆ.வா.ஐ. | : | ஆலய வாலிபர் ஐக்கியம் |
| ஆ. ஐ. | : | ஆண்கள் ஐக்கியம் |
| பெ. ஐ. | : | பெண்கள் ஐக்கியம் |
| ஞா.பா.ஆ. ஐ. | : | ஞாயிறு பாடசாலை ஆசிரியர் ஐக்கியம் |
| இ.த. ஐ. | : | இளம் தம்பதியினர் ஐக்கியம் |

ஆ. ஐ.: ஐயா இந்த தலைப்பே சரியில்லை. முதல்ல இந்த விவாதக்களம் தேவையானு கேட்கத் தோணுது. ஏன்னா ரோமர் 10:10 தெளிவாக சொல்லுகிறது நீதியுண்டாக விசுவாசிக்க வேண்டும், இரட்சிப்புண்டாக அறிக்கை செய்ய வேண்டும்.

கோ. குட்டி: ஐயா தெளிவா ஆரம்பிச்சு வைச்சிருக்கீங்க. இப்போ நம்ம விவாதமே எதை அறிக்கை செய்யணும் என்பதுதானே.

ஆ. ஐ.: இதிலே என்ன சந்தேகம் ! "இயேசப்பாதான்"

ஆ. வா.: அதான் இயேசுவை வச்சுதான் பாடல் பாடுறோம், **Worship** நடத்துறோம், **Message** கேட்கிறோம்.

கோ. குட்டி: சரிதான் தம்பி, இப்போ என்னுடைய கேள்வி விசுவாச பிரமாணம் தெரியுமா? தெரியாதா?

ஞா. ப. ஆ.: ஏற்கனவே நியாயப்பிரமாணமே தேவையில்லைனு இயேசப்பாவே சொல்லிட்டாரு. இப்போ என்ன புது பிரமாணமா விசுவாச பிரமாணத்தை (வி.பி) கொண்டு வாரீங்க. இது பைபிள்ல எங்கேயும் பார்த்த மாதிரி இல்லையே.

பெ. ஐ.: நீ சொல்றது சரிதான் ! வி.பி பைபிள்ல இல்ல. ஆனா ஒரு ஆலய ஆராதனைக்கு முக்கியமானது அதுமட்டுமா. பரமண்டல ஜெபம், சகரியாவின் கீதம், சிமியோன் கீதம், கன்னி மரியாளின் கீதம், மூன்று வாலிபர் கீதம் மற்றும் லித்தானியா ஜெபம் இது எல்லாமே முக்கியம்.

கோ. குட்டி: அம்மா, நீங்க சொல்றது சரிதான். ஆனா இப்போ நாம வி.பி மட்டும் பார்ப்போம்.

ஆ. வா.: எங்க பாஸ்டர் பைபிள்ள இல்லாத எதையுமே, அதாவது பாரம்பரியமா சொல்லுகிற சுருக்க ஜெபமோ, அல்லது நீங்க சொல்ற எதையுமே பயன்படுத்த மாட்டார்

கோ. குட்டி: தம்பி நீங்க சொல்றது ஏற்றுக்கொள்ளலாம். சுமார் 2 அல்லது 3 மணி நேரம் உங்கள் ஆராதனையில் பரமண்டல ஜெபம் உண்டா, கடைசியா தாவீதின் துதி உண்டா.

ஆ. வா.: அதான் சொல்றோமே பைபிளில் இல்லாததை நாங்க சொல்ல மாட்டோமுன்னு.

ஞா. ப. ஆ.: பரமண்டல ஜெபம் பைபிளில் இருக்குதுன்னு நினைக்கிறேன். ஆனா தாவீதின் துதி, அந்த அம்மா சொன்ன ஒரு கீதமும் பைபிள்ல இல்ல.

கோ. குட்டி: அம்மா நீங்க பைபிள்ள எது இருக்கு. எது இல்லைன்னு சொல்றதுல கவனமா இருக்கீங்க. ஆனா எல்லாமே தப்பாதான் சொல்றீங்க.

இ. த.: நீங்க சொல்ற வி.பி எனக்குத் தெரியும். ஆனா, இப்போ **Touch**ல இல்ல, **School life**க்கு பிறகு **College**, **Job**, **Marriage**ன்னு **City**யிலுள்ள சபையில் தான். ஆனா, அதைப் பத்தி இப்போ ஏன் பேசணும். இது அவசியம் தானா?

கோ. குட்டி: நான் உங்களைப் பார்த்து மூன்று கேள்விகள் கேட்க விரும்புகிறேன்

1. கடைசியா கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய செய்தியை எப்போ கேட்டீங்க.
2. இரகசிய வருகை, பகிரங்க வருகை, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, அர்மெதோன் யுத்தம், கணக்கு ஒப்புவித்தல், வெள்ளாடு-செம்மறி ஆடு பிரித்து நியாயத்தீர்ப்பு இதெல்லாம் யாருக்கு எப்போதுன்னு வரிசையா சொல்ல முடியுமா?
3. நம்முடைய மார்க்கத்தைக் குறிக்கும் மையம் எது?

இ. த.: மூன்று கேள்வியுமே யோசிக்க வைக்கிறது.

ஞா. ப. ஆ.: மூன்றாம் கேள்விக்கு பதில் இயேசு தானே. இதில் என்ன சந்தேகம். அதேபோல முதல் கேள்விக்கு பதில் **Youtube**ல இன்று வரைன்னு **Daily update** பண்ணிட்டு தானே இருக்காங்க. 2ஆம் கேள்விக்கு பதில் அது கடவுளுடைய வேலை அது ஏன் நமக்கு தெரியணும்.

ஆ. ஐ.: நானும் அதனாலதான் சொல்ல வரேன். ஏன் நம்ம பாரம்பரியத்தை இந்த ஜெனரேஷனுக்குள்ள திணிக்கனும். என் மருமகா வருஷத்துக்கு ஒருமுறை எங்க ஊர் ஆராதனையில் பங்கு பெறுவா. உங்க சபை ஆராதனை **Fire**ஆ இல்லைனு சொல்லுவா. நம்ம பாரம்பரியத்தை கொண்டு அவங்க சர்ச்சில திணிச்சா அவ கோவிலுக்கு போறதையே நிறுத்திருவாளோன்னு பயமாயிருக்கு.



MR. ISAAC KAMALESH

# விவாதக்களம்

கோ. குட்டி: ஐயா இந்த விவாத களம் வேண்டாம்னு சொன்னதினுடைய பயம் எனக்கு புரியுது.

பெ. ஐ.: நாங்கள் வாலிப பிள்ளைகளாயிருக்கும்போது கட்டாயம் எங்க கையில நாலு புத்தகம் இருக்கும் (பைபிள், கீர்த்தனை, பாமாலை, ஜெப புத்தகம்). இரண்டாம் மணி அடிக்கிறதுக்குள்ளே கோயிலுக்குள் போய் முழங்கால் போட்டுருவோம்.

கோ. குட்டி: அம்மா நீங்க இதெல்லாம் ஞாபகப்படுத்தி பயமுறுத்தாதீங்க.

இ. த.: சரி நம்ம வி.பிக்கு போவோம். இதுல என்ன முக்கியம் இருக்கு.

கோ. குட்டி: நான் கேட்ட மூன்றாம் கேள்விக்கு ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் சரியா ஆனா தப்பா பதில் சொன்னாங்க. அதாவது நமது மையம் திரித்துவ தேவன். ஒருவரில் மூவரானவர், மூவரில் ஒருவர். அதை பிதா,குமாரன், பரிசுத்த ஆவி என்று திரியேக தேவனை ஆராதிக்கிறோம். இதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இந்த வி.பி அதைதான் மீண்டும் மீண்டும் நமக்கு ஞாபகப்படுத்தி, நமது ரத்த நாளங்களில் பதிய வைக்கிறது.

ஞா. ப. ஆ.: அதை ஒரு முறை முழுமையாகச் சொல்லுங்களேன்.

கோ. குட்டி: அதை இப்போ சொல்ல முடியாது. அதை சொல்லிக் கொடுக்க நான் வரலை. அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளணும்னு சொல்ல வரேன். ஆராதனைக்கு-ஆவியானவர், செய்திக்கு-இயேசுவானவர். எபிரெய மொழியில் சில சொற்கள் கடவுள் நாமத்துக்காகப் பயன்படுத்துகிறது இப்போ உள்ள வழக்கமாயிற்று. “கன்னிமரியாளிடத்தில் உற்பவித்து பிறந்தார்” என்ற வார்த்தையை அறிக்கைப் பண்ணாததினால் நமக்கு சந்தேகம் வருகிறது. “நியாயம் தீர்க்க மீண்டும் வருவார்” என்பதை அறிக்கை பண்ணாததினால் அவர் வருவாரா என்ற சந்தேகமுள்ளது. வி.பி அறிக்கையின் நோக்கமே செய்தியில், ஜெபத்தில், ஆராதனையில் நாம் சமநிலையில் தேவனை ஆராதிக்க வேண்டும் என்பதுதான்.

ஞா. ப. ஆ.: சரி யார் எழுதினது, எதுக்கு எழுதினது சொல்ல முடியுமா.

கோ. குட்டி: அதை எழுதின வரலாறு சற்று பெரிசு. அதனால ஏன் எழுதினாங்கன்னு மட்டும் சொல்லுகிறேன். அதாவது வேத புத்தகம் அதிகம் கிடைக்காத காலம், ஜனங்களின் கல்வி அறிவு குறைவு மற்றும் வேதம் வாசிக்கத் தெரியாத காலம். அந்தக் காலத்தில் திரியேக தேவனை மையமாக வைத்து கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், கடைசி நியாயத்தீர்ப்பு மற்றும் ஒரே ஞானஸ்நானம் இவைகள் மையமாக இருக்க வேண்டும் என உருவாக்கப்பட்டது. நம்முடைய ஆராதனைகளில் செய்திகள், பாடல்கள், ஜெபங்கள் இந்த கட்டமைப்புக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது.

ஆ. வா.: நீங்க சொல்றத பார்த்தா இப்போ மிஷன் பணித்தளங்களில் இதைப் பயன்படுத்துறார்களா?

ஞா. ப. ஆ.: நாங்க தான் இப்ப நல்லா படிச்சிருக்கோமே. ஏன் பைபிள் **Competition**க்கு கூட போறோம். அதைத் திரும்பத் திரும்ப சொல்றதினால என்ன பயன்.

கோ. குட்டி: சரியா கேட்டம்மா ! நம்ம கிறிஸ்தவம் என்பது ஒரு மார்க்கம், அது மதமல்ல. அதற்கு அடிப்படை கோட்பாடு உள்ளது. நம்பிக்கை உண்டு. இதை விசுவாசிக்க வேண்டும். இரட்சிப்பில் தொடர்ந்து வளர அதை அறிக்கை செய்யனும். இல்லைன்னா நூறு மதங்களில் ஒரு மதமா நம்மளே மாத்திடுவோம். ஆரவாரமுள்ள ஆராதனை நல்லாதானிருக்கும். ஆனா அதுவே நம்மள மழுங்கடிச்சிட்டோன்னு நினைக்க தோணுது. அர்த்தமுள்ள ஆராதனைக்கு நாம மாறனும்.

**(கோவில் குட்டி கண்களில் கண்ணீர் நிரம்ப இருகரம் கூப்பி நிற்கிறார்)**

**(விடை தெரிந்தும் வழி காணாமல் விவாதக் களம் கலைகிறது)**





**பின் குறிப்பு:**

**ஜெபப் புத்தகம், பாரம்பரிய சபைகளிலோ, CLS, ELS, WOC (or) கிறிஸ்தவ புத்தக நிலையங்களிலோ கிடைக்கும். அதை வாங்கி ஒரு முறையேனும் வாசித்துக் கொள்ளுங்கள்.**

# யோவேல்

## கர்த்தரே தேவன்

REV. JOHNSON DANIEL





ஆப்பிரிக்கப் பழங்குடியினர் காடுகளில் வசிக்கும் குரங்குகளைப் பிடிப்பதற்கு ஒரு விசித்திரமான வழியைப் பின்பற்றுகின்றனர். குரங்குகளுக்கு மிகவும் பிடித்த உணவான நிலக்கடலையை வறுத்து, அதனை பெரிய பூசணிக்காயில் சிறு துவாரமிட்டு அதனுள் வைத்துவிடுவார்கள். இந்த நிலக்கடலையின் வாசனையினால் ஈர்க்கப்பட்ட குரங்கு, அதனை எடுப்பதற்கு முயற்சி செய்யும்போது கை பூசணிக்காய் உள்ளே திறந்தபடி செல்லும். பின் கடலையை எடுத்த பின் கை மூடிய நிலையில் அச்சிறிய துவாரத்தின் வழியாக வெளியே வரமுடியாமல் மாட்டிக்கொள்ளும். இந்நிலையில் கடலையைப் போட்டுவிட்டு தப்பிக்க மனமில்லாமல் குரங்கு அகப்பட்டுக் கொள்ளும். இதுபோல தான் அன்றைய இஸ்ரவேல் தேசத்தின் தென் பகுதியான யூதா தேசத்தின் ஆவிக்குரிய நிலையும் இரண்டுவிதமான சிந்தனைகளால் சீர்க்கெட்டிருந்தது. எப்படியெனில், தேவனுக்கும், தங்களுக்குமுள்ள உறவை விட்டு தூரமாகி, சோரம்போனார்கள். யேகோவா தேவனை புறந்தள்ளி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றி, பின்மாற்றமடைந்து தேவாலயத்தைத் தீட்டுபடுத்தி, இறுதியில் தேவனுக்கு விரோதிகளாகிப் போனார்கள். இந்நிலையில் தேவன் "யேகோவா கடவுள்" என்னும் அர்த்தமுடைய பெயரைக் கொண்ட தமது தாசனாகிய யோவேல் என்னும் தீர்க்கதரிசியின் மூலம் தன்னிடம் திரும்புமாறும், கர்த்தருடைய நாளின் நியாயத்தீர்ப்பினின்று தங்களைக் காத்துக்கொள்ளுமாறும் அறைகூவல் விடுகிறார்.

### கர்த்தரின் நாள் - மனந்திரும்புதலுக்கான அவசியம்:

புதிய ஏற்பாட்டின் காலத்திலிருந்த யோவான் ஸ்நானகனைப்போல யோவேல் தீர்க்கதரிசி கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது, எனவே மனந்திரும்புங்கள் என மூன்று அதிகாரங்களில் ஐந்து முறை (1:15; 2:1, 11, 31; 3:14) அழைக்கிறார். குறிப்பாக, முதலாம் அதிகாரத்தில் யூதாவின் பாவ நிலையும், அதினால் வரும் தேவனின் நியாயத்தீர்ப்பையும் கூறி மக்களை எச்சரிக்கிறார். இரட்சிக்கப்படுவதின் முதல் நிலையே பிழையுணர்தல் ஆகும். அதாவது, நான் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்துள்ளேன் என்ற உணர்வே நம்முடைய ஆவிக்குரிய வாழ்வின் ஆரோக்கிய நிலையின் அடிப்படையாகும். யோவேல் தன் மக்களுக்கு அதையே வலியுறுத்துகிறார். இதோ நீங்கள் ஒருக்காலும் கண்டிராத, கேட்டிராத நியாயத்தீர்ப்பு வருகிறது. இதற்குக் காரணம் நீங்கள் செய்த பாவங்களும், அக்கிரமங்களுமே என்பதை யோவேல் 1:1-11 என்ற வசனங்களில் எடுத்துக் கூறுகிறார். தேசத்தின் தற்போதைய பரிதாபமான நிலையிலிருந்து மீளவேண்டுமாயின் மனந்திரும்ப வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி மனந்திரும்ப அழைக்கிறார். தனிமனித வாழ்வின் மீறுதல்கள் ஒரு தேசத்தின் அழிவிற்கு காரணமாகிவிடுகிறது என்றால் அது மிகையாகாது. நம்முடைய தேசத்தின் சீர்வாழ்விற்கும், சுகவாழ்விற்கும் நம்முடைய மனந்திரும்புதல் அவசியம் என்கிற உணர்வு நமக்கு உண்டா?

### கர்த்தரின் நாள் - மாற்றத்திற்கான வேளை:

பின்மாற்றமான வாழ்க்கை (Backsliding Life) எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை இஸ்ரவேல் தேசத்தின் வடபகுதியிலுள்ள இஸ்ரவேலருக்கும், அத்தேசத்திற்கும் ஏற்பட்ட நிலையைக் கண்டிருந்தும், அதிலிருந்து எந்த ஒரு பாடத்தையும் கற்றுக்கொள்ள மனமில்லாமல், தென்தேசமான யூதாவும் அதே வழியைப் பின்பற்றி தேவனுக்கு தூரமாகி, அந்நிய தேசத்தில் அடிமைகளாகிப் போனார்கள். எனவே தீர்க்கதரிசியின் மூலமாய் தேவனுடைய வார்த்தை அந்நிய தேசத்திலிருந்த அவர்களிடத்தில் வருகிறது. பாவத்திற்கு அடிமையாவதினால் ஏற்படும் மோசமான விளைவுகள் நமக்கு எவ்வித படிப்பினையை அளிக்கிறது என்பதை நாம் சிந்தித்து, நம் வாழ்வை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். என்றோ ஒரு நாள் அல்ல, ஒவ்வொரு நாளும் தானியேலைப்போல தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் காணப்படுவது அவசியம். அதற்கென நாம் ஆவிக்குரிய வாழ்வில் அனலாயிருப்பது முக்கியம். இன்றைக்கு நம் தேசத்தின் அல்லது திருச்சபையின் இந்த நிலைக்கு மற்றவர்களை காரணம் சொல்லும் மனப்பான்மை நம்மில் காணப்படுகிறது. ஆனால் நம்முடைய பொறுப்பை என்றாவது உணர்ந்திருக்கிறோமா? நாம் தேவனோடுள்ள உறவிலே ஒவ்வொரு நாளும் வளர்ந்து, தேவனுக்கு சாட்சியாக வாழ்கிறோமா? நம் தேசத்தை அல்லது திருச்சபையைக் குறித்த தேவதிட்டத்தை நிறைவேற்ற நம்மில் அந்த வைராக்கியம் இருக்கிறதா?

### கர்த்தரின் நாள் - மாறாத வாக்குத்தத்தம்:

பாவத்தை வெறுக்கும் நமது ஆண்டவரின் இன்னொரு மாறாத குணம் பாவிகளை நேசிப்பதாகும். பாவத்தினால் தூரமாகிப்போன இஸ்ரவேலரை மீட்கவே யோவேல் தீர்க்கதரிசியைக் கர்த்தர் அனுப்புகிறார். அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, மீண்டும் அவர்களது தேசத்திற்குத் திரும்பி வரப்பண்ணுவதோடு, அவர்களைச் சந்திக்கும்படி தானே வருவதாக மூன்றாம் அதிகாரத்தில் வாக்குப்பண்ணுகிறார். யாரெல்லாம் அவர்களை அடிமைப்படுத்தினார்களோ, இரக்கமின்றி நடத்தினார்களோ அவர்கள் நியாயம் விசாரிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பிலே பங்கடைவார்கள் என்பதனை உறுதிப்படுத்துகிறார். அதேபோல் தாம் தெரிந்துகொண்ட தமது ஜனத்திற்கு அடைக்கலமும், இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பேன் என வாக்குப்பண்ணுகிறார். நியாயத்தீர்ப்பின் நடுவிலும் நீதிமான் இரட்சிக்கப்படுவான் என்பதை இது தெளிவுப்படுத்துகிறது. மேலும், அவருடையவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையுண்டு என்பதை நாம் அறிந்துக்கொள்ள முடிகிறது.

*ஆண்டவர் நம்மை முற்றிலும் வெறுத்துவிடவில்லை. நாம் மனந்திரும்பி, அவரது பிள்ளையாய், அவரோடு, அவருக்காய் வாழ நம்மை அழைக்கிறார். அவர் பின் செல்ல நீங்கள் ஆயத்தமா?*

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!



## டெல்கொய் பணித்தளம் - கியோன்ஜகார் மாவட்டம் - ஒடிசா



Mr. Suriya Kumar

ஒடிசா மாநிலம் தொன்மையான மொழிகளையும், கலாச்சாரத்தையும் கொண்ட ஒரு மாநிலம். ஜமாவட்டத்தில் 1980, 1999 மற்றும் 2008இல் ஜுவாங் என்ற குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் (Particularly vulnerable Tribal Groups) மத்தியில் ஊழியத்தை ஆரம்பித்தோம். (இந்தியாவிலுள்ள 744 பழங்குடி மக்களினங்களில் 75 மக்கள் இனங்கள் கல்வி, பொருளாதார வளர்ச்சியின்மை, மக்கள் தொகை சரிவு காரணமாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் என அழைக்கப்படுகின்றனர்) எங்கள் சரீர சுகவீனத்தின் காரணமாக தொடர்ந்து ஊழியம் செய்ய முடியவில்லை. 2010ஆம் ஆண்டு முதல் பல்லடா பணித்தளம் ஆரம்பிக்கப்பட்டு ஊழியம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அருகிலுள்ள டெல்கொய் வருவாய்க் கோட்டத்தை ஆய்வு செய்து டெல்கொய் பணித்தளம் ஜுவாங் மக்கள் மத்தியில் புதிய பணித்தளம் ஆரம்பிக்க வாஞ்சிக்கிறோம்.



### டெல்கொய் பணித்தளம் ஓர் அறிமுகம்:

கியோஞ்ஜகார் மாவட்டத்திலுள்ள டெல்கொய், ஹரிசந்தன்பூர், பான்ஸ்பால், கால்காவ் போன்ற வருவாய் கோட்டங்களில் மட்டும் சுமார் 27000 ஜுவாங் மக்கள் வாழ்கின்றனர். டெல்கொய் வருவாய் கோட்டத்தில் 95718 மக்கள், 148 கிராமங்களில் வாழ்கின்றனர். இப்பகுதியில் கல்வி அறிவு வெறும் 65.79 % மட்டுமே. பெண் கல்வி 47.51 % மட்டுமே. இப்பகுதியில் வாழும் கிறிஸ்தவர்கள் வெறும் 469 பேர் அதாவது 0.49% மட்டுமே.

### ஜுவாங் - குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள்:

ஜுவாங் மக்களைப் பொதுவாக “பட்டுவா” அதாவது இலைகளை அணிபவர்கள் என அழைக்கின்றனர். காரணம் முந்தைய காலங்களில் இலைகளை மட்டுமே ஆடையாக அணிந்து வந்துள்ளனர். தற்போது சேலை, வேட்டி அணிகின்றனர். தர்மதேவ்தா, பாசுமாதா, கிராமஷ்ரீ போன்ற தெய்வங்களை வணங்குகின்றனர்.

### வாழ்வாதாரம் & தொழில்:

பாரம்பரியமாக இவர்கள் வேட்டையாடிகள் மற்றும் வன பொருள் சேகரிப்போர். தற்போது காளான், பீடி இலைகள் மற்றும் விறகு பொறுக்கி விற்று பிழைக்கின்றனர். மூங்கில் கூடை பின்னுதல், விவசாயம் போன்ற தொழில்களையும் செய்து வருகின்றனர்.

### சுகாதாரம்:

ஒரிசா மாநிலத்தில் பழங்குடி மக்கள் மத்தியில் குழந்தை இறப்பு விகிதம் IMR 78.7/1000. ஆனால் ஜுவாங் மக்கள் மத்தியில் யதார்த்தம் இன்னும் அதிகம்.

### ஜெபியுங்கள்:

- ஆவி வணக்கம் கொண்ட இவர்கள் உண்மையான தேவனை அறிந்து கொள்ள...
- வெறும் 42.8 % மட்டுமே கல்வி அறிவு பெற்ற ஜுவாங் மக்கள் கல்வி அறிவு பெற்று தங்களது வாழ்வாதாரத்தில் உயர
- சத்து குறைபாடு ஆண்கள் மத்தியில் 57.5%, பெண்கள் மத்தியில் 82.8 % இந்நிலை மாற ஜெபிப்போம்.

அன்பு வாலிபனே! இருள் நிறைந்த எல்லைகளில் வாழும் ஜுவாங் மக்கள் நல் வாழ்வு பெற, ஒடிசா மாநிலத்தின் பல்லடா, டெல்கொய் பணித்தளத்தில் கர்த்தருடைய ஆத்தும அறுவடை பணியைச் செய்ய நீ வருவாயா?

# மெக்சிகோ



மெக்சிகோ வட அமெரிக்காவின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகும். இது தோராயமாக 1,964,375 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இது உலகின் 13வது பெரிய நாடாக அமைகிறது. மெக்சிகோ, வடக்கே அமெரிக்காவுடனும், தெற்கே குவாத்தமாலா மற்றும் பெலிசுடனும், தென்மேற்கில் பசிபிக் பெருங்கடல், கிழக்கில் மெக்சிகோ வளைகுடா மற்றும் கரீபியன் கடல் ஆகிய எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. நாட்டின் வடக்கில் பாலைவனங்கள், மையத்தில் வளமான பள்ளத்தாக்குகள் மற்றும் தெற்கில் வெப்பமண்டல காடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**தலைநகரம் : மெக்சிகோ நகரம்**
**நாணயம் : மெக்சிகன் பெசோ (MXN)**
**அரசியல் அமைப்பு: மத்திய ஜனநாயக குடியரசு**
**மக்கள் தொகை : சுமார் 129 மில்லியன் மக்கள்**
**புனித இடங்கள் :குவாடலூப் அன்னையின் பசிலிக்கா**
**நம்பிக்கையின் பண்டிகைகள் : ஃபீஸ்டா டி சான் வாலண்டின் (புனித காதலர் தினம்) (பிப்ரவரி 14)**

மெக்சிகோவின் கிறிஸ்தவ வரலாறு 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதத்தின் வருகையுடன் தொடங்கியது. இது இன்றும் ஆதிக்கம் செலுத்தும் மதமாக உள்ளது. சுமார் 78% மக்கள் கத்தோலிக்கர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். மேலும் கத்தோலிக்க மரபுகள் தொடர்ந்து மெக்சிகன் கலாச்சாரத்தை வடிவமைக்கின்றன. இருப்பினும், புராட்டஸ்டன்ட் மற்றும் இவாஞ்சலிக்கல் தேவாலயங்கள், குறிப்பாக கிராமப்புற மற்றும் பழங்குடி பகுதிகளில் வளர்ந்து வருகின்றன. இங்கு இப்போது கிறிஸ்தவ மக்கள்தொகை 11%க்கும் அதிகமாக உள்ளது. இது மிகவும் மாறுபட்ட கிறிஸ்தவ நிலப்பரப்பை உருவாக்கியுள்ளது. மதத்துடன், கால்பந்து (Football) மற்றும் பேஸ்பால் (Baseball) ஆகியவை மிகவும் பிரபலமாக உள்ளன. இது மெக்சிகோவின் வலுவான மரபுகள் மற்றும் நவீன கலாச்சாரத்தின் கலவையைப் பிரதிபலிக்கிறது.

**மெக்சிகோவிற்கான ஜெபக் குறிப்புகள்:**

**1. கிறிஸ்தவர்கள் மீதான துன்புறுத்தல்:**

- ✦ மத்திய மற்றும் தெற்கு மெக்சிகோவின் சில பகுதிகளிலுள்ள கிறிஸ்தவர்கள் கலப்பு மத மரபுகளைக் கொண்ட மதத் தலைவர்களாலும், ஆயுதமேந்திய கிளர்ச்சியாளர்களாலும் துன்புறுத்தப்படுகிறார்கள். நிராகரிக்கப்பட்ட போதிலும் உண்மையாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு மன வலிமை மற்றும் தைரியத்திற்காகவும், வன்முறை மற்றும் இழப்பை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு கர்த்தரின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.
- ✦ இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தின் காரணமாக பல விசுவாசிகள் தங்கள் சமூகங்களால் நிராகரிக்கப்படுகிறார்கள், இதனால் அவர்கள் வேலைகள், நிலம் மற்றும் குடும்ப சொத்துக்களை இழந்துள்ளனர். நிலம், நீர் அல்லது வாழ்வாதார இழப்புகளுக்கு மத்தியிலும், விசுவாசிகளின் ஒற்றுமைக்காக ஜெபிப்போம்.

**2. மெக்சிகன் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்:**

- ✦ மெக்சிகோவிலிருந்து நாட்டிற்குள்ளோ அல்லது எல்லைகளைத் தாண்டியோ, குறிப்பாக அமெரிக்காவிற்கு வேலை தேடியும், தங்கள் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கவும் இடம்பெயரும் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஒவ்வொரு ஆண்டும் கைது செய்யப்படுகிறார்கள். நூற்றுக்கணக்கானோர் கடக்க முயற்சிக்கும்போது இறக்கின்றனர். எல்லையைத் தாண்டி தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
- ✦ விவசாயம், கட்டுமானம், உற்பத்தி, வீட்டு வேலைகள் போன்ற துறைகளில் குறைந்த ஊதியம் மற்றும் உடல் ரீதியாக கடினமான வேலைகளில் ஈடுபடுகின்றனர். புலம்பெயர்ந்த வருவாயைச் சார்ந்திருக்கும் குடும்பங்களுக்காக நாம் ஜெபிப்போம்.

> என் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளை ஆதரிக்கும் நம்பிக்கையில், நான் மெக்சிகோவின் ஒக்சாகாவிலிருந்து ஒரு பருவகால விவசாயத் தொழிலாளியாக அமெரிக்காவிற்கு வந்தேன். என் முதலாளி என் ஊதியத்தைத் தடுத்து நிறுத்தி, பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் நீண்ட நேரம் வேலை செய்யும்படி என்னை வற்புறுத்தினார். நான் நெரிசலான, சுகாதாரமற்ற குடியிருப்புகளில் வசித்தேன், அது என்னை நோய்களுக்குள்ளாக்கியது. நான் உதவி தேடினால், நாடு கடத்தப்படுவேன் என்று மிரட்டப்பட்டேன். காலப்போக்கில், உடல் ரீதியான சிரமமும், மன அழுத்தமும் மிக இளம் வயதிலேயே என் உடல்நலத்தையும், நல்வாழ்வையும் பாதித்தன.
> – மிகுவேல், 28 வயது புலம்பெயர் தொழிலாளி

> 2021இல் நான் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபோது என் துன்பங்கள் தொடங்கின. என் சமூகத்தில் உள்ள அதிகாரிகள் முதலில் என் நிலத்தின் பட்டாவைப் பறிக்க முயன்றனர். நான் என் நிலத்தில் வேலை செய்ய முடியாதபடி என் சான்றிதழைப் பறித்துக்கொண்டனர். என்னையும், என் மனைவியையும் 24 மணி நேரம் சிறையில் அடைத்தனர். இறுதியாக, எங்கள் குடிநீர் மற்றும் பொதுச் சேவைகளை துண்டித்துவிட்டனர்.
> –மௌரிசியோ, ஒரு மெக்சிகன் கிறிஸ்தவ விசுவாசி

# வாலிபர்கள் ஊழியத்தின் ஜெபக் கரிசனைகள்

## "வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்". (சங்கீதம் 127:5)

PRAYER POINTS – FMPB - MINISTYRY

Rev. Daniel David

பிரியமானவர்களே! இம்மாதம் நம்முடைய பணித்தளங்களில் வாழும் திரளான வாலிபர்களுக்காக ஜெபிக்கப் போகிறோம். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறியாமலும், அவரின் அன்பினைப் புறக்கணித்த நிலையிலும் திரளான வாலிபர்கள் பணித்தள கிராமங்களில் காணப்படுகின்றனர். மற்றொரு புறம் இயேசுவை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாச சந்ததியினர் சிறிய எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களின் ஆத்தும மீட்பின் ஈடேற்றத்துக்காகவும், நல்வாழ்வுக்காகவும் தேவனிடம் மன்றாடுவோம்.

### ஜெபக் கரிசனைகள்:

- ✦ வட இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும், தாலுகாவிலும், கிராமங்களிலும் வாலிபர் மத்தியிலான ஊழியங்களை செய்ய அநேக ஊழியர்களை கர்த்தர் எழுப்பித் தர ஜெபிப்போம்.
- ✦ வட இந்தியாவிலுள்ள அனைத்து கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் ஜெபக்குழுக்கள் துவங்கப்பட ஜெபிப்போம்.
- ✦ நம்முடைய பணித்தள திருச்சபைகளில் வாலிபர்களுக்கான ஜெப ஐக்கியம் துவங்கப்பட்டு, கிரமமாக நடத்தப்பட ஜெபிப்போம்.
- ✦ வாலிபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக மாதாந்திர பத்திரிக்கைகள், வருடாந்திர வேத தியான புத்தகங்கள் மற்றும் அநேக ஆவிக்குரிய நூல்கள் நாம் பணி செய்கிற அனைத்து பிரதான மொழிகளிலும் உருவாக்கப்பட்டு, விநியோகிக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ சமூக ஊடகங்களின் வழியாக வேத சத்தியங்களையும், கருத்தாழமிக்க பாடல்களையும் அந்தந்த மொழிகளில் வாலிபர்களுக்கு கொண்டு செல்லும் முயற்சிகள் எடுக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ நமது பணித்தளங்களிலிருந்து கல்வி மற்றும் பணிகளுக்காக புலம்பெயரும் வாலிபர்களுக்கு உதவிடவும், பின் தொடர் பணி செய்ய ஏதுவாக தொடர்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படவும் ஜெபிப்போம்.
- ✦ விசுவாச இளைஞர்கள் தங்களுடைய வாழ்விடங்களிலும், கல்வி மற்றும் பணியிடங்களிலும் இயேசுவுக்கு சாட்சியாக வாழ ஜெபிப்போம்.
- ✦ வாலிபர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார தேவைகள் தடையின்றி சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ பல்வேறு இருளின் கிரியைகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் அடிமைப்பட்டிருக்கும் வாலிபர்களை பரிசுத்த ஆவியானவர் விடுவிக்க ஜெபிப்போம்.
- ✦ நம்முடைய பணித்தள பிராந்தியங்களில் வாழும் வாலிபர்களைச் சந்திக்க, வாலிபர் மத்தியிலான ஊழியங்களை ஒருங்கிணைக்க வாஞ்சையுள்ள ஊழியர்கள் பிரத்தியேகமாக நியமிக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ பணித்தளங்கள்தோறும் வாலிபர்களுக்கென சிறப்பு கூடுகைகள் நடத்தப்படவும், பிற வாலிபர்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.
- ✦ விசுவாச இளைஞர்கள் மத்தியிலிருந்து திரளான தேவ ஊழியர்களைத் தேவன் எழுப்பவும், அரசு நிர்வாகம், ஊடகம், தொழில் போன்ற பல்வேறு துறைகளில் உயர்வான நிலைகளுக்கு வாலிபர்கள் உயர்த்தப்படவும் மன்றாடி ஜெபிப்போம்.



# தூக்கமின்மை நோய்
## INSOMNIA DISORDER

தூக்கமின்மை நோய் என்பது தூங்குவதில் சிரமம், தொடர்ந்து தூங்க முடியாமை, அல்லது தூங்கிய பிறகும் உடல் சோர்வாக உணர்வது ஆகும்.

### ஏன் ஏற்படுகிறது?

இன்றைய இளைஞர்களின் ஒழுங்கற்ற தூக்கத்திற்கான காரணங்கள்:

- ✦ தூங்குவதற்கு முன் அதிகமாக மொபைல், லேப்டாப், டிவி பார்ப்பதால் பகல் நேரத்தில் தூக்கம் வரும் உணர்வு.
- ✦ கல்வி கற்பதில் ஏற்படும் மனஅழுத்தம்.
- ✦ அதிக எதிர்பார்ப்பு, பதட்டம், விரக்தி போன்ற மனநலப் பிரச்சனைகள்.
- ✦ முன் தூங்கி, முன் எழும் பழக்கமில்லாமை, போதுமான நேரம் தூங்காமலிருப்பது.

### எப்படி பாதிக்கிறது?

மோசமான தூக்கம் மனநிலை, நினைவாற்றல், கற்றல் திறன் மற்றும் ஆற்றலைப் பாதிக்கிறது. இது நீண்ட காலம் தொடர்ந்தால் உடல் மற்றும் மனநலத்திற்குத் தீங்கு விளைவிக்கும்.

### சிகிச்சை உள்ளதா?

ஆம், இந்த தூக்கமின்மை நோய் சிகிச்சையளிக்கக்கூடியதே. இதை சிறிய வாழ்க்கைமுறை மாற்றங்கள் மூலம் சரிசெய்யலாம்.

### அறிகுறிகள் தெரிந்தால் என்ன செய்யலாம்?

- ✦ அறையை அமைதியாகவும், இருட்டாகவும், குளிர்ச்சியாகவும் வைத்துக் கொண்டு, தினமும் ஒரே நேரத்தில் தூங்கி எழுங்கள். (இரவில் 8 மணி நேர தூக்கம்)
- ✦ தூங்குவதற்கு குறைந்தது 1 மணி நேரத்திற்கு முன் மொபைல் / லேப்டாப் / டிவி பயன்பாட்டை குறைக்கவும்.
- ✦ இரவு நேரங்களில் தேநீர், காப்பி போன்ற பானங்கள் மற்றும் திண்பண்டங்களைத் தவிர்ப்போம்.
- ✦ படுக்கையில் படிப்பு அல்லது வேலை செய்ய வேண்டாம். அது சோம்பலை ஏற்படுத்தும்.
- ✦ பகல் நேரத்தில் உடற்பயிற்சி செய்யுங்கள்.
- ✦ தூங்குவதற்கு முன் உங்கள் கவலைகளை நோட்டுப் புத்தகம் / டைரியில் எழுதுங்கள் அல்லது ஆலோசகரிடம் பேசுங்கள்.



### புள்ளிவிவரங்கள்:

1. டெல்லியில், சுமார் 5 இளைஞர்களில் ஒருவர் (20–22%) மனச்சோர்வு ஏற்பட்டு தூக்கக் கோளாறினால் பாதிக்கப்படுகிறார்கள்.
2. Bayer Consumer Health என்ற இந்தியாவின் முன்னணி மல்டிவிட்டமின் நிறுவன ஆய்வில், 25–35 வயதினருக்குள் பலர் அடிக்கடி சோர்வுடன் விழிப்பதும், தூக்கமின்மையாலும் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது.
3. சுமார் 59% இந்தியர்கள் இரவில் 6 மணி நேரத்திற்கும் குறைவாகத் தூங்குவதால் இந்நோய் ஏற்படுகிறது.
4. "Wake fit Scorecard" போன்ற ஆய்வுகள், இளம் வயதினர் 80%க்கும் அதிகமானோர் தூங்குவதற்கு முன் மொபைல் பயன்படுத்துவதால் தூங்க தாமதமாகின்றனர் என தெரிவித்துள்ளன.

"கர்த்தர் தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்" (சங்கீதம் 127:3)

### ஜெபிக்க:

- ✦ தேவன் அமைதியில்லாத மற்றும் சோர்ந்து போன உள்ளங்களுக்கு நிம்மதியான தூக்கத்தை அளிக்க
- ✦ கவலை, பயம், கெட்ட சிந்தனைகள் நீங்கி ஒவ்வொருவருடைய இருதயமும் சமாதானத்தால் நிரப்பப்பட
- ✦ நல்ல தூக்க பழக்கங்களை உருவாக்கும் ஞானமான முடிவுகளை ஒவ்வொருவரும் எடுக்க
- ✦ வாலிபர்கள் இரவு நேர மனஅழுத்தம், மொபைல் அடிமைத்தனம், கல்வி / வேலை அழுத்தம் போன்றவை நீங்கி ஜெபம் மற்றும் வேதாகமம் வாசிப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட
- ✦ இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்கள் தங்கள் சிந்தனைகளையும், எதிர்காலத்தையும் கர்த்தரிடத்தில் ஒப்படைத்து, பயமின்றி நம்பிக்கையுடன் வாழ ஜெபிப்போம்.

**விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்**

# ஓர் இனிய உரையாடல்



Praise the Lord, அண்ணா

**கேள்வி: உங்களைக் குறித்து சொல்லுங்க...**

அருட்பணியாளர் பதில்: என் பெயர் ஆர். ஜார்ஜ் எட்வர்ட். நான் மதுரையைச் சேர்ந்தவன். என் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை மதுரையிலேயே படித்தேன். நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும், கர்த்தரின் மேல் பற்றுதல் இல்லாதவனாக இருந்தேன். என் கல்லூரி காலத்தில், இவாஞ்சலிக்கல் யூனியன் (EU) நடத்திய மாணவர்கள் கூட்டத்தில், என் வாழ்க்கையை கர்த்தருக்காக அர்ப்பணித்து, அவரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். பின்னர், கர்த்தருடனான என் உறவு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இவாஞ்சலிக்கல் யூனியன் (EU) பணிகளுக்காக நான் கர்த்தரை நன்றியுடன் துதிக்கிறேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்பொழுது ஏற்பட்டது?**

அருட்பணியாளர் பதில்: GEMS அமைப்பைச் சேர்ந்த திரு. அகஸ்டின் ஜெபகுமார் அவர்கள் நடத்திய கூட்டத்தில் என்னை முழுநேர ஊழியத்திற்கென ஒப்புக்கொடுத்தேன். பின்னர், EGF (Evangelical Graduates Fellowship) நடத்திய கூட்டத்தில், வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியத்தை மையமாகக் கொண்டு, மிஷனெரி பணிக்காக என்னை அர்ப்பணித்து, FMPBஇல் மிஷனெரியாக இணைந்தேன். FMPBஇன் பிரசார ஊழியத்தின் போது, குக்னா வேதாகம மொழிபெயர்ப்பாளர் Rev. Alaichamy Paul அவர்களை சந்தித்தேன். அவர் வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியத்தை ஏற்றுக்கொள்ளவும், இயக்கத்தின் மிஷனெரி பணியில் பல தடைகள் இருந்தபோதிலும் எவ்வாறு முன்னேற வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலையும் எனக்கு அளித்தார். இது என் ஊழிய வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

**கேள்வி: மனமாற்றத்திற்குப் பிறகு நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: உலக இன்பங்களை விட்டு விலகுவது ஒரு சவாலாக இருந்தது. திருச்சபை ஆராதனை, வேதாகம வாசிப்பு, பெற்றோர் மற்றும் சகோதரர்களுடனான குடும்ப ஜெபம் போன்றவைகளால் கர்த்தருக்குள்ளும், அவருடைய சத்தியத்திலும் வளரவும், அவரை இன்னும் ஆழமாக அறிந்திடவும் முடிந்தது.

**கேள்வி: சவால்களை மேற்கொண்ட பிறகு நீங்கள் எடுத்த தீர்மானம் என்ன?**

அருட்பணியாளர் பதில்: எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்கான அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கவும், அவரின் மேலுள்ள விசுவாசத்தில் தொடர்ந்து வளர்ந்திடவும், பின்திரும்பிவிடக் கூடாது என்ற தீர்மானத்தோடும் இருந்தேன். ஆனாலும், சில நேரங்களில் நான் தடுமாறியதும் உண்டு. ஆனால் ஆண்டவர் என்னை கைவிடவில்லை. அதன் விளைவாக, என் ஆவிக்குரிய வாழ்விலும், ஊழியத்திலும் வளர முடிந்தது.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்தி பணி செய்ய வேண்டும் என்ற தாகம் எப்படி வந்தது?**

அருட்பணியாளர் பதில்: கொடைக்கானலில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளியில் திரு. அகஸ்டின் ஜெபகுமார் அவர்கள் பகிர்ந்த செய்தி, வட இந்தியாவில் மிஷனெரிப் பணிக்காக அர்ப்பணிக்கும் தீப்பொறியை என் உள்ளத்தில் ஏற்றியது. தூத்துக்குடியைச் சேர்ந்த பேராசிரியர் ஜவன் பாலசிங் அவர்கள் எனக்கு FMPB அமைப்பை அறிமுகப்படுத்தினார். பின்னர் நான் FMPBஇல் இணைந்தேன். என் அனைத்துத் திறமைகளையும், ஆற்றல்களையும் தேவ ராஜ்ய விரிவுக்கென்று பயன்படுத்த வேண்டும் என்ற ஆழ்ந்த உந்துதல் எனக்கு ஏற்பட்டது.

**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: குஜராத்தின் குக்னா மக்களிடையே திருச்சபை நிறுவுநராக (Church Planter) பணியாற்றிய போது நான் அதிகமாக எதிர்கொண்ட போராட்டம் தனிமை என்பதுதான். இசையைக் கேட்டு ஆறுதல் பெறும் வாய்ப்புகள் இல்லாததால், தனிமையை சமாளிக்க முடியவில்லை. என் திருமணத்திற்கு பிறகு, குடியிருக்க, மொழிபெயர்ப்பு ஊழியத்தை மேற்கொள்ள ஏற்ற வீடு கிடைப்பதும் சவாலாகவே இருந்தது.

கேள்வி: ஊழியத்தின் பாதையில் தேவன் தந்த தரிசனம் என்ன?

அருட்பணியாளர் பதில்: ஜார்கண்டைச் சேர்ந்த மால்டோ மக்களுக்கு சுவிசேஷம் சென்றடைய மால்டோ மொழியில் முழு வேதாகமத்தையும் மொழிபெயர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான்.

**கேள்வி: தரிசனத்தை நிறைவேற்ற நீங்கள் கொடுத்த விலை கிரயங்கள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: எங்கள் ஊழியத்தில், குறைந்த வசதிகள் மற்றும் அதிகமான தடைகள் ஆகியவை அடங்கியிருந்தன. முக்கியமாக வேதாகம மொழிபெயர்ப்பு பணியில் துல்லியமானச் சொற்றொடர்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்ட சவால்கள் அதிகம்.

**கேள்வி: விலை கிரயம் செலுத்தியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

அருட்பணியாளர் பதில்: மால்டோ மக்களிடையே நாங்கள் செய்த ஊழியத்தினால் அநேக மாற்றங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தன. ஒருகாலத்தில் மங்கிவிட்டதாக கருதப்பட்ட மால்டோ சமூகம், இன்று மக்கள்தொகை வளர்ச்சியுடனும், ஆவிக்குரிய எழுச்சியுடனும் முன்னேற்றமடையத் தொடங்கியது. மால்டோ சமுதாயமே, தங்கள் சொந்த மொழியில் முழு வேதாகமத்தையும் பெற்ற முதல் மக்களினமாகும். இதனால் இந்தியாவிலும் வங்கதேசத்திலும் வாழும் மால்டோ மக்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளனர். எங்களுடைய ஓய்வுக்குப் பிறகும், FMPBஇல் வார்லி வேதாகம மொழிபெயர்ப்புப் பணி உட்பட பல்வேறு திட்டங்களுக்கு ஆதார நபர்களாக (Resource Persons) எங்களைக் கர்த்தர் பயன்படுத்தி வருகிறார். சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்களைச் சந்திக்க வாலிபர்களாகிய நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டும். அப்பொழுது பரலோகமானது இந்தியர்களால் நிரப்பப்படும்!

**ஜெபிக்க:**

- ✦ மால்டோ மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட
- ✦ மால்டோ மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தை மால்டோ மக்கள் படித்து, விசுவாசத்தில் வளர
- ✦ மால்டோ மக்கள் நடுவே நடந்துக் கொண்டிருக்கும் FMPBஇன் ஊழியம், அதிக விளைச்சலைக் கொண்டு வர
- ✦ இங்கு ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளைக் கர்த்தர் பாதுகாத்துக் கொள்ள
- ✦ கர்த்தரை இன்னும் அறியாத மக்களிடையே ஊழியம் செய்ய அநேக மால்டோ வாலிபர்கள் எழும்ப ஜெபிப்போம்

PRAYER POINTS – YOUTH RELATIONSHIPS

Mrs. Jeba Saral

# Dating Fatigue



இந்த காலத்தில் நாம் எங்கு பார்த்தாலும் வாலிபர்களிடையே டேட்டிங், டேட்டிங் என்றே கேட்க முடிகிறது. யாரை கேட்டாலும் தாங்கள் டேட்டிங் பண்ணுவதாக கூறுகிறார்கள்!!! இப்படி டேட்டிங் என்னும் மோகத்தில் விழுந்து, சிக்கி தவிக்கும் இளைஞர்களுக்காக, இந்த மாதம் நாம் திறப்பிலே நிற்கவிருக்கிறோம். அதற்கு நீ ஆயத்தமா! இவ்வுலகில் 1500க்கும் மேற்பட்ட டேட்டிங் Apps மற்றும் இணையதளங்கள் இருக்கிறது. இந்தியாவிலும் அதன் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. உலகளாவிய டேட்டிங் ஆப்ஸ் (Apps) தவிர, இந்தியாவிலேயே உருவாக்கப்படுகிற டேட்டிங் ஆப்சை (Apps) வாலிபர்கள் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். Monetization என்கிற பெயரில், இந்த டேட்டிங் Apps பயனர்களை, பலவித இச்சைகளைத் தூண்டக்கூடிய காரியங்களைச் செய்ய வைக்கிறது!! இந்த apps சம்பந்தமான பல மோசடி குற்றங்களை சமீப காலமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவற்றுள் Fake ID மூலம், பலர் தங்களை, ஓர் அழகிய ஆணாகவோ, பெண்ணாகவோ சித்தரித்து, அந்த ஆப்பில் உள்ள மற்றவர்களோடு பழகி விடுகின்றனர். பின்னர் அவர்களது நம்பிக்கையைப் பெற்றவுடன், இவர்கள் தங்கள் வேலையை காண்பிக்கின்றனர். பல நேரங்களில் தனியாக சந்திக்க வர சொல்வது, ஹோட்டல்களில் தனி அறை எடுத்து ஒரு நாள் தங்குவது போன்ற ஆசை வார்த்தைகளைக் கூறிவிட்டு, தாங்கள் பல விலை உயர்ந்த பொருட்களை அவர்களுக்கு பரிசாக தருவதாக கூறி ஏமாற்றுகின்றனர். இதனை நம்பி, பலர் பெரிய பெரிய ஹோட்டல்களில் அறைகளை புக் செய்து அந்த மறு பாலினத்தவரோடு நன்றாக பேசி மகிழ்கின்றனர். பின்னர் இவர்கள் கொடுக்கும் உணவுகளில் மயக்க மருந்துகளைக் கலந்து, விலை உயர்ந்த செல்போன், லேப்டாப்புகள் மற்றும் பல லட்சம் பணங்களை ஏமாற்றி விடுகின்றனர். இவ்வகை மக்களுக்காக நாம் ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

**ஜெபக்குறிப்புகள்:**

- டேட்டிங் appsஇல் தங்கள் பணத்தை, நேரத்தை, முதல் காதலை, நம்பிக்கையை இழந்து தவிக்கின்ற இளைஞர்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- தாங்கள் உறவுகளால் மறுபடியும் ஏமாற்றப்பட்டு விடுவோமோ என்கிற பயத்திலேயே, திருமணம் செய்யாமல் இருக்கும் இளைஞர்களுக்காக ஜெபிப்போம்.
- இவ்வகை ஆசை வார்த்தைகளால் இழுப்புண்டு, காதல் வயப்பட்டு, அதன் பின்னர் அந்த உறவினால் வரும் அச்சுறுத்தல்களையும், அடக்குமுறைகளையும் தவிர்க்க முடியாமல் சிக்கி தவிக்கும் இளைஞர்களுக்காக ஜெபிப்போம்.
- இந்த ஆப்சை (Apps) Time Passக்காக பயன்படுத்தும் வாலிபர்களின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்.
- விசுவாச குடும்பத்தினரின் வாலிபப் பிள்ளைகள் கர்த்தரைத் தேடவும், அவரையே பற்றி கொண்டிருக்கவும் ஜெபிப்போம்.
- பள்ளி, கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள், இவ்வித அடிமைத்தனங்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.
- கணக்கெடுப்பின்படி Tinder ஆப்பில் 75 மில்லியன் மக்கள் 2026இல் இருக்கின்றனர். இவர்களின் மனந்திரும்புதலுக்காக ஜெபிப்போம்.
- இந்தியாவில் மட்டும் அடுத்த ஆண்டுக்குள் 28 மில்லியன் பயனாளர்கள் வந்து விடுவார்களென்று கணக்கெடுப்பு கூறுகிறது. இந்த நிலை மாற ஜெபிப்போம்.
- நிமிஷத்தாசைக் காட்டி, அக்கினி கடலில் தள்ளும் சாத்தானின் செயல்களை வாலிபர்கள் உணர்ந்து, கர்த்தரையே நோக்கி பார்த்து பரிசுத்த வாழ்வு வாழ ஜெபிப்போம்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

# பாவ்ரி மொழி

**பாவ்ரி மொழி பேசும் பரேலா பாவ்ரா மக்கள் அறிமுகம்:**

ஜீவனுள்ள தேவனின் வல்லமையான ஜீவ வார்த்தை இன்றும் பலரால் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. அதில் ஒன்று தான் பீல் குடும்பத்தை சேர்ந்த பரேலா பாவ்ரி மொழி. பரேலா பாவ்ரா இன மக்கள் குஜராத்தில் பாவாகாட் என்ற பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள். 10.42 லட்சம் பாரேலா பாவ்ரா மக்கள் இன்று குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா மாநிலங்களில் வசித்து வருகிறார்கள். அவர்களின் மொழி பரேலா பாவ்ரி. பரேலா பாவ்ரா மக்களின் கிளை மொழியான ராட்வி, பிலாலா, பாலீயா மொழியும் இப்பகுதியில் பேசப்பட்டு வருகிறது. அதோடு அப்பகுதியில் பீலி, நொய்ரி, அஹிராணி போன்ற மொழிகளும் பேசப்பட்டு வருகிறது.

விவசாயம் இம்மக்களின் பிரதான தொழில். இவர்கள்ஆவி வணக்கம் உடையவர்கள், தற்பொழுது சிலர் குருவைப் பின்பற்றுகிறார்கள். இவர்கள் சாராயம் காய்த்து, இறப்புகள் மற்றும் திருமணங்களில் குடித்து விட்டு இரவு முழுவதும் நடனம் ஆடும் கலாசாரத்தைக் கொண்டவர்கள்

**பாரேலா பாவ்ரி மொழிபெயர்ப்பு ஊழியம்:**

ஓர் அழகிய இளைஞன் திருவண்ணாமலை பட்டணத்திலிருந்தார். அவர் லுத்தரன் திருச்சபையைச் சேர்ந்தவர். பெற்றோர்க்குச் செல்ல மூத்த மகனான இவர் அதிக பக்தியாய் வளர்க்கப்பட்டார். ஏனெனில் அவரின் பெற்றோர் அவரை பிறப்பிலேயே தேவ ஊழியத்திற்கென்று அர்ப்பணித்திருந்தனர். அவரின் பெற்றோர் நண்பர் சுவிசேஷ ஜெப குழுவின் ஜெப குழு தலைவர்களாகவும் இருந்தனர்.

இவர் தனது வாலிப வயதை மிக அழகாக ஜாலியாக வாழ வேண்டும் என்ற பல கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் Msc (Maths) நிறைவாண்டு படித்துக் கொண்டிருக்கும் போது, தன் ஜெபத்தில் தேவன் அவரை வேதாகம மொழிபெயர்ப்புப் பணி செய்ய தன்னை அழைப்பதை தெளிவாக உணர்ந்து, உடனடியாக கீழ்ப்படிந்து நம் இயக்கத்தில் இணைந்து 1981இல் வேதாகம மொழிபெயர்ப்புப் பணிக்கான பயிற்சிகளை (Linguistic trainings) பயின்றார். அவர்தான் அருள்திரு. இம்மானுவேல் இறைபிச்சை என்பவர். இவர் ஜார்கண்டிலுள்ள மால்டோ மக்கள் மத்தியில் 5 ஆண்டுகள் குடும்பமாக திருச்சபையை நிலைநாட்டும் பணியைச் செய்து, 2000இல் மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பரேலா பாவ்ரா மக்கள் மத்தியில் குடும்பமாக பணிச்செய்ய தொடங்கி, இம்மக்களின் பாவ்ரி பாஷை, இலக்கணம், கலாச்சாரம் இவைகளைக் கற்று, பாவ்ரா இன மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, பரேலா பாவ்ரி மொழியில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து தந்தார். மேலும் இயேசு திரைபடத்தை டப் செய்தும், விடுமுறை வேதாகம பாடதிட்ட புத்தகங்களை அம்மொழியில் மக்களுக்கு தந்தார்.

2019இல் சேலம் டேனிஷ்பேட்டை மாநில முகாமில் புதிய ஏற்பாட்டை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். அவர் திடீரென கொரோனாவில் பாதிக்கப்பட்டு 21 ஆண்டுகள் மொழிபெயர்ப்பு ஊழியத்தை நிறைவு செய்து ஏப்ரல் 9ஆம் தேதி 2021இல் தேவ இராஜ்ஜியம் சென்றடைந்தார்.

அச்ச்சோ! என்னடா! என்று நினைக்கிறீர்களா? அவரோடு இம்மொழிப்பெயர்ப்பு பணியும் நின்று விடுமோ என பலருக்குக் கேள்வி குறி இருந்தது. ஆனால் அவரது துணைவி திருமதி. ஜேன் இம்மானுவேல் இந்த ஊழியத்தை தொடர்ந்து செய்து வருகிறார்கள். இது இந்திய வேதாகம சங்கத்தால் அச்சிடப்பட்டு 2023இல் மஹாராஷ்டிரா மாநிலத்தில் பணித்தளத்தில் பிரதிஷ்டை செய்து விநியோகிக்க தேவன் கிருபை செய்தார்.

**மொழிபெயர்ப்புப் பணியின் சவால்கள் மற்றும் சாதகங்கள்:**

- தமிழ் நாட்டிலிருந்து வட இந்தியா செல்பவர்களுக்கு புதிய மொழி, கலாச்சாரம் கற்பதே பெரிய சவால்கள். அதனால் மொழிப்பயிற்சி, மொழிபெயர்ப்புப் பயிற்சி அளிக்கப்படும்.
- ஆரம்ப நாட்களில் மின்சார தடை ஒரு நாளில் 12-14 மணி நேரம் இருந்தது. ஆனாலும் கணிணி மற்றும் ஜெனரேட்டர் வழங்கப்பட்டது.
- அகராதி (Dictionary) அநேக பீல் மொழிகளில் இருப்பதால் எளிதாக மற்ற கிளை மொழிகளிலும் மொழிப்பெயர்ப்புப் பணிச் செய்ய வாய்ப்பு கிடைத்துள்ளது.

**ஜெபியுங்கள்:**

- பழைய ஏற்பாடு மொழிப்பெயர்ப்புப் பணி நேர்த்தியாய் நடைபெற
- பாவ்ரி மொழியில் ஆடியோ வேதாகமம் (Audio Bible), மற்றும் உடன்படிக்கை காணொலி (Covenant film) ரெக்காட் செய்யப்படும் பணி நேர்த்தியாய் நிறைவேற
- முதியோர் பாட கல்வி திட்டங்கள் அவர்கள் பாஷைகளில் அச்சிடப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு, 18 கிராமங்களில் வகுப்புகள் முறையாக நடைபெற்று வருகிறது. இம்முயற்சிகள் நல்ல பலன் தர
- மக்கள் கைகளில் கிடைக்க பெற்ற பாவ்ரி புதிய ஏற்பாட்டை விசுவாசிகள் அனுதினமும் வாசித்து ஆவிக்குரிய வாழ்வில் வளர
- பாவ்ரி வேதாகமத்தை மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் ஆலய ஆராதனைகளில் வாசிக்க
- பாவ்ரா மக்கள் தங்கள் தாய் மொழியை, மாநில மொழிகளை விட தாழ்வாக எண்ணாமல் தாய் மொழி வேதாகமத்தை பயன்படுத்த ஜெபிப்போம்.

**வாலிப தம்பி தங்கைகளே!!**

சீகன்பால்கைக் கொண்டு நம் தமிழ் மொழியில் வேதாகமம் தந்த கர்த்தர், உங்களை கொண்டும் அநேக மொழிகளில் வேதாகமத்தை தர வல்லவராயிருக்கிறார். இந்த மொழிப்பெயர்ப்புப் பணியின் தொடரோட்டத்தில் உங்களையும் கர்த்தர் அழைத்தால் உடனடியாகக் கீழ்ப்படிந்து அர்ப்பணிப்பீர்களா??

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...





## USA VS VENEZUELA

- போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஜனாதிபதி மடுரோ நியூயார்க் நீதிமன்றத்தில் ஆஜராக உள்ள நிலையில், அமெரிக்கா வெனிசுலாவுடன் போர் இல்லை என்று கூறுகிறது.
- உலகத் தலைவர்களும் நுகர்வோராகிய நாடுகளும் அரசியல் அல்லது தனிப்பட்ட ஆதாயங்களுக்கு அப்பாற்பட்ட ஞானத்துடன் ஆள வேண்டுமென்றும், பேச்சுவார்த்தைகளிலும், ஒப்பந்தங்களிலும் நேர்மையுடன் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

## BJP'S VICTORY IN BMC ELECTIONS

சிவசேனாவின் நீண்டகால ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், பிராந்திய மும்பை நகராட்சி (BMC) தேர்தலில் பா.ஜ.க பெற்ற வெற்றி, மும்பையின் உள்ளூர் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகக் கருதப்படுகிறது.தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் கட்சி சார்பு நலன்களைத் தாண்டி, ஒற்றுமையுடன், தன்னலமின்றி சேவை செய்ய நேர்மை மற்றும் ஒத்துழைப்புடன் காணப்பட ஜெபிப்போம்.












## 3 KILLED AT ILLEGAL MANJUVIRATU EVENTS


- சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நடந்த மஞ்சுவிரட்டு நிகழ்வுகளில், பங்கேற்பாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.
- துயரத்தில் வாடும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலும், வலிமையும் கிடைக்கவும், எதிர்கால பாரம்பரிய நிகழ்வுகளில் இதுபோன்ற துயரங்களைத் தடுக்க தேவையான ஞானத்தைப் பெறவும், பாதுகாப்பான விதிமுறைகளை கையாளும்படியும் ஜெபிப்போம்.

## DELHI IN EXTENSIVE PREP FOR 77TH REPUBLIC DAY

- குடியரசு தின விழாவை முன்னிட்டு டெல்லி நகரம் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் காணப்பட்டது. மாபெரும் பேரணி, போக்குவரத்து மாற்றங்கள் மற்றும் நகரம் முழுவதும் அலங்காரங்கள் என சிறப்பாக நடைபெற்றது.
- பொதுநலனை காக்கும் தலைவர்கள், நிறுவனங்கள் நீ தி மற்றும் வெளிப்படை தன்மையுடன் நடந்துக் கொள்ளவும், இளைஞர்கள் நாட்டின் நலனுக்காக செயல்படவும் வேண்டுமென்றும் ஜெபிப்போம்.








## SOCIAL MEDIA & GEN Z OVERCONSUMPTION

- சமூக ஊடகங்கள், இலக்கு வைக்கப்பட்ட விளம்பரங்கள், செல்வாக்கு செலுத்துபவர் கலாச்சாரம் மற்றும் FOMO (விடுபட்டுவிடுவோமோ என்ற பயம்), உடனடி திருப்தி போன்ற உளவியல் தூண்டுதல்கள் மூலம் ஜென் Zஇன் நுகர்வுப் பழக்கவழக்கங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.
- ஜென் Z தலைமுறைக்கு நிதி மேலாண்மையில் ஞானம் கிடைக்கவும், அவர்களின் இருதயங்கள் நிலையற்ற உலகப் பொருட்களைவிட, நித்திய பொக்கிஷமாகிய கர்த்தரின் மீது திரும்பவும் ஜெபிப்போம்.

## COLLEGEMATES BEAT YOUTH TO DEATH IN VELLORE

- 19 வயதுடைய கல்லூரி மாணவன் டேனி, ஒரு பெண்ணுடன் உள்ள உறவைச் சுற்றிய சந்தேகமான தகராறில், தனது வகுப்பு நண்பர்கள் இரண்டு பேரால் கழுத்தை நெரித்தும், இரும்புக் கம்பியால் அடித்தும் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அவரது உடல் ஆந்திரப் பிரதேச எல்லைப் பகுதியில் வீசப்பட்டதாக தகவல்.
- ஒவ்வொரு மனித உயிரின் புனிதத்தையும் உணர்ந்து கொள்ளும்படியான கண்களையும், இருதயத்தையும் கர்த்தர் இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்படியும், இளைஞர்கள் பொறாமை மற்றும் கோபத்தின் பாதையிலிருந்து விலகி கர்த்தருக்கு சித்தமான வழியில் நடக்கவும் ஜெபிப்போம்.





# தனிமையில் உரமூட்டப்பட்ட பவுலின் வைராக்கியம்

பரிசேயர்களின் நம்பிக்கைக்காக அதிக வைராக்கியத்துடன் இருந்த பவுலை தேவன் எவ்வாறு சந்தித்தார் என்பதைக் கடந்த மாதத்தில் பார்த்தோம். இதன் விளைவாக, புதிதாக உருவாக்கப்பட்ட சபையைத் துன்புறுத்துவதில் இருந்த பவுலின் வைராக்கியம், இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதற்கான வைராக்கியமாக மாறியது. ஆனால் இப்படிப்பட்ட மாற்றத்தில் உதயமாகும் ஆரம்ப சக்திவாய்ந்த ஆற்றல் மட்டுமே அவர்கள் தங்கள் வைராக்கியத்தை கடைசி வரை பாதுகாக்கப் போதுமானதாக இல்லை என தேவனால் பயன்படுத்தப்பட்ட பலரின் வாழ்க்கைகளிலிருந்து நாம் அறிகிறோம். எனவே, தேவன் அவர்களுக்கான தமது பயிற்சியைக் கிட்டத்தட்ட உடனடியாக ஆரம்பிக்கிறார். மோசே தன் 40வது வயதில் தன் மக்களின் நலனுக்காகக் கொண்டிருந்த தனது வைராக்கியத்தை வெளிப்படுத்தினார் (யாத். 2:12). உடனே தேவன் அவரை பயிற்சி பெறுவதற்காக அடுத்த 40 ஆண்டுகள் "மீதியானின் பாலைவன பல்கலைக்கழகத்திற்கு" கொண்டு சென்றார். இதுபோலவே, பவுலும் தேவனால் பயிற்றுவிக்கப்பட்டார் என்பதை இந்த மாதம் காண இருக்கிறோம்.

பவுல் கி.பி. 33ஆம் ஆண்டில் ஒரு தரிசனத்தில் இயேசுவைச் சந்தித்தார். அந்தியோகியாவிலிருந்து அவரது முதல் மிஷனெரிப் பயணம் கி.பி. 46-48ஆம் ஆண்டுகளில் நடந்தது. இடைப்பட்ட இந்த 13 முதல் 15 ஆண்டுகளில், எதிர்ப்பின் கடுமையிலிருந்து விலக்கப்பட்டு, பவுல் பயிற்சியின் கீழ் வைக்கப்பட்டார். இது ஒரு தீவிரமான ஆவிக்குரிய வடிவமைப்பு, நடைமுறை பயிற்சி மற்றும் தெய்வீக வழிகாட்டுதலின் காலமாக இருந்தது. இந்த காலம் பெரும்பாலும் அவரது "மௌன ஆண்டுகள்" என குறிப்பிடப்படுகிறது.

பவுல் யூதர்களின் மிகச்சிறந்த போதகர்களில் ஒருவரான கமாலியேலால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தபடியால் வேதத்தில் நன்கு புலமைப் பெற்றவராக இருந்தார் (அப். 22:3). எனினும், தமஸ்குவில் தேவன் "அனனியா" என்ற ஒரு சாதாரண விசுவாசியிடம் பவுலைப் பயிற்சியின் கீழ் வைத்தார் (அப். 22: 12-16). அவர் பவுலைக் குணப்படுத்தி, ஞானஸ்நானம் பெறச் செய்து, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வழிநடத்தி, அவரது அழைப்பை உறுதிப்படுத்தினார். இது தனது மதம் தந்த பெருமைகளை பவுலின் வாழ்விலிருந்து முற்றிலும் நீக்கியது. பின்னர், பவுல் தமஸ்குவிற்குத் தெற்கே அரேபியாவிற்கு அனுப்பப்பட்டார். இங்கே அவர் தேவனுடன் தனிமையாக இருந்தார். இயேசு கிறிஸ்துவின் தன்மை மற்றும் அவருடைய பணி குறித்து மேலும் தெளிவைப் பெற்றார் (கலா. 1:11, 12; 2கொரி. 12:1-4).

பின்னர், பவுல் தமது களப்பயிற்சிக்காக தமஸ்குவுக்குத் திரும்பி, ஜெப ஆலயங்களில் பிரசங்கிக்கத் தொடங்கினார். பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்துவை முன்வைக்கக் கற்றுக்கொண்டார். ஆனாலும், உடனடியாக துன்புறுத்தல்களை எதிர்கொண்டார். அதிலிருந்து தப்பிக்க ஒரு கூடையில் வைத்து, அவர் ரகசியமாக வெளியேற்றப்பட்டார் (அப். 9:23-25). இது கிறிஸ்துவுக்காக வாழ்வது ஆரம்பத்திலிருந்தே துன்பத்தை விளைவிக்கும் என்பதை அவருக்குப் புரிய வைத்தது. அவர் எருசலேம் சென்றார். இது அவர் மனமாறிய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நடந்தது. அங்கு அவர் பேதுருவுடன் 15 நாட்கள் இருந்தார். மேலும் இயேசுவின் சகோதரரான யாக்கோபையும் சந்தித்தார் (கலா. 1:18, 19). இது முக்கியமான அப்போஸ்தல தலைவர்களுடன் பழகுவதற்கு அவருக்கு வாய்ப்பளித்தது. அவர் கிரேக்க யூதர்களுடன் வாதிட்டதால், கொலை மிரட்டல்கள் எழுந்தன (அப். 9:29). எனவே அவர் அடுத்த பயிற்சி நிலையமான அவரது சொந்த ஊரான சிலிசியா மாகாணத்திலிருந்த தர்சுவுக்கு அனுப்பப்பட்டார்.

தர்சுவில் பவுல் சுமார் 8-10 ஆண்டுகள் கழித்தார். இது ஒரு நீண்ட "மறைக்கப்பட்ட" உள்ளூர் பணிக்காலமாக இருந்தது. அவர் சோம்பியாக இருக்கவில்லை அவர் தன் சொந்த பிராந்தியங்களான சிரியா மற்றும் சிலிசியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பல சபைகளை நிறுவியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது (அப். 15:23, 41). சபை நிறுவுதல் மற்றும் சபை பராமரிப்பு ஆகியவற்றை அவரது பயிற்சி காலத்தில் செய்தார். அவரை முதிர்ச்சியடைய செய்யவும், உள்ளூர் சபை சூழலைப் புரிதலை ஆழப்படுத்தவும், துன்புறுத்துபவர் என அறியப்பட்ட அவரது பெயர் மறக்கடிக்கப்பட்டு, அதற்கு பதிலாக



விசுவாசத்தைப் பிரசங்கிப்பவர் என அறியப்படவும் செய்ய தேவன் இந்த நேரத்தைப் பயன்படுத்தினார்.

இறுதியாக, அந்தியோகியாவில் பெருகிவரும் புறயினத்தார் சபைக்கு உதவி தேவைப்பட்ட பர்னபா, பவுலை தர்சுவில் தேடிக் கண்டுபிடித்து, அந்தியோகியாவிற்கு அழைத்து வந்தார். ஒரு முழு ஆண்டு அவர்கள் ஒன்றாக சபைக்குக் கற்பித்தனர். இது மிக முக்கியமான குழுப்பணிப் பயிற்சியாக இருந்தது. புத்திசாலியான இறையியலாளரான பவுல், "ஆறுதலின் மகன்" என்று அழைக்கப்படும் பர்னபாவிடமிருந்து, கூட்டாளியாக வேலை செய்வது எப்படி என்பதையும், பல்வேறுபட்ட மக்கள் நிறைந்த சபையை எப்படி பராமரிப்பது என்பதையும், பலதரமான மக்கள் வாழும் ஒரு முக்கியமான நகரத்தில் எப்படி செயல்படுவது என்பதையும் கற்றுக்கொண்டார். அந்தியோகிய சபையினர் கர்த்தரை ஆராதித்து, உபவாசமிருந்த போது பரிசுத்த ஆவியானவர் வெளிப்படையாக "பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்திருக்கிற பணிக்கென பிரித்துவிடுங்கள்" என்று சொன்னார். இன்னும் ஜெபித்து உபவாசித்த பின்பு, சபையார் அவர்கள் மேல் கைகளை வைத்து அனுப்பினர். இதுவே அவரது முதல் மிஷனெரி பயணத்துக்கு ஆதாரமாக இருந்த தெய்வீக மற்றும் சபையின் ஆணையாக இருந்தது. அவரது பயிற்சி இப்போது ஆவியானவராலும், இறை மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டு உறுதிபடுத்தப்பட்டது (அப். 13:1-3).

### நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

ஊழியத்தின் பல்வேறு அம்சங்களைக் கற்றுக்கொள்வதற்காக பவுல் ஐந்து வெவ்வேறு இடங்களில் பயிற்சி பெற்றார். இது அவருக்கு தேவன் கொடுத்த வைராக்கியத்தை செயல்படுத்தும் முன் உறுதியான அடித்தளத்தை அளித்தது. நாம் கடந்த மாதம் வலியுறுத்தியது போல, தம்முடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக தேவன் உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பயிற்சி திட்டத்தை வைத்திருக்கிறார். நான் என்னுடைய வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கையில், தேவன் என் பிறப்பிலேயே என்னைத் தம் ஊழியராகத் தேர்ந்தெடுத்தார். என் தந்தையின் மூலம் மிஷனெரிப்பணிக்கான ஆரம்ப ஊக்கத்தைப் பெற்றேன். 10 வயதாய் இருக்கும்போதே என் வாழ்க்கையை கர்த்தருக்கு அர்ப்பணித்தேன். பின்னர், 13வது வயதில் என் தந்தையை இழந்ததால், என் வாழ்க்கை கடினமான சூழலில் சிக்கியது. எனினும், தேவன் என்னை உயர்கல்வி நிலையங்களுக்கும், ஒரு அற்புதமான அறிவியல் நிறுவனத்தில் வேலை செய்யவும் அழைத்துச் சென்றார். என்னுடைய 18வது வயதிலிருந்து ஜெபத்தில் வளர கர்த்தர் என்னைப் பயிற்றுவித்தார். இறுதியாக, கர்த்தர் என்னை முழுநேரப் பணிக்கு அழைக்கும் முன் 30வது வயதில் நான் கடவுளுக்கு கொடுப்பதிலும், வேதத்தை ஆழமாக கற்றுக் கொள்ளவும், ஜெபக்குழுவுடன் கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பகிரும் ஊக்கத்தில் வளரவும் அவர் எனக்கு உதவினார்.

அன்புள்ள வாலிபர்களே, உங்கள் வாழ்க்கைக்கான தேவ அழைப்பை நீங்கள் அடையாளம் கண்டிருக்கிறீர்களா? தேவன் இப்போது உங்களைப் பயிற்றுவிக்கும் விந்தையான வழிகளைப் புரிந்து அவரோடு ஒத்துழைக்கிறீர்களா?

## வாலிபர் ஜெபக்குழுவின் ஆரம்பமும், வளர்ச்சியும்...

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு சேலம் பிராந்தியத்திலுள்ள வாலிபர் பிரிவை சிறப்பாக நடைபெற கிருபை செய்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையும், கனமும் உண்டாவதாக. இதனை வாசிக்கும் உங்களுக்கும் எங்கள் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2010ஆம் ஆண்டு முதல் வாலிபருக்கென்று சிறப்பு ஐக்கிய கூடுகை அவ்வப்போது நடைபெற்றாலும் 2022ஆம் ஆண்டின் துவக்கம் முதல் மாதந்தோறும் 4ஆம் ஞாயிறு அன்று ஒரே இடத்தில் வாலிபர் கூடுகை நடைபெற்று வருகிறது. இதில் 25 முதல் 30 வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களும் கலந்துக் கொள்கின்றனர். மேலும் வாலிபப் பெண்கள் 3 குழுக்களாகப் பிரிந்து மாதம் ஒருமுறை கூடி ஜெபிக்கின்றனர். வாலிப ஆண் பிள்ளைகள் 2 குழுக்களாகப் பிரிந்து மாதம் ஒருமுறை கூடி ஜெபிக்கின்றனர்.

சேலம் மாவட்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடத்தும் ஒவ்வொரு கூடுகைகளிலும் பாடல் மற்றும் கோரியோகிராபி (Choreography) வேளையில் வாலிபர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர். கிராமங்களில் நடத்திய படக்காட்சி ஊழியம் மற்றும் கிறிஸ்துமஸ் காலங்களில் கீத பவனி போன்றவைகளில் வாலிபர்கள் தேவன் தங்களுக்கு தந்த பொறுப்பாக எண்ணி குழுவாக இணைந்து சிறப்பாக செயல்பட்டனர்.

இயக்கத்தின் மூலம் நடைபெறும் வாலிபர் கூடுகைகளில் கலந்து கொள்ளும் வாலிபர்கள் மிஷனெரி தரிசனம் பெற்று, தேவப்பணிக்கென்று தங்களை அர்ப்பணிக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். கிறிஸ்து இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்!



# எழும்பி பிரகாசி '2026

## வாலிபர் முகாமில் கர்த்தர் எழுப்பிக் கொடுத்த ஜீவனுள்ள சாட்சிகள்

- பாவத்திலிருந்து எப்படி வெளியே வருவது, எப்படி தொடர்ந்து ஜெபிப்பது என்பதைக் கற்றுக்கொண்டேன். எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மிஷனெரி பகிர்வு எனக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. இவர்களுக்காக ஜெபிக்க முடிவு செய்தேன். வாலிப வயது மிகவும் மதிப்புமிக்கது என்பதையும் உணர்ந்துக் கொண்டேன். எனவே என் வாழ்க்கையை தேவனுடன் அதிகமாக செலவிட தீர்மானித்தேன்.
- இந்த கூட்டம் என் இரட்சிப்பை புதுப்பிக்க உதவியது. பராமரிப்பு, உணவு மற்றும் ஒவ்வொரு Sessionயும் எனக்கு மிகவும் பயனுள்ளதாகவும், மிகவும் சிறப்பாகவும் இருந்தது.
- 3 நாள் முகாம் எனக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. FMPBயின் மூலமாக இன்னும் அதிகமான கூட்டங்கள் நடைபெற வேண்டும். இந்த தலைமுறை வாலிபர்கள் மிஷனெரிகளைப் பற்றி இன்னும் அதிகம் அறிந்துகொள்ள முடிந்தது.
- மிஷனெரி பகிர்வு எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.
- ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் மிகவும் பயனுள்ளதும், தாக்கம் ஏற்படுத்த கூடியதுமாயிருந்தது. இரண்டாம் நாள் Devotion மிகவும் பயனுள்ளதாயிருந்தது.
- இந்த முகாம் என் தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தேவனுடன் உள்ள உறவை புதுப்பிக்க இது மிகவும் உதவியாக இருந்தது. சில Sessions என்னை ஆழமாக சிந்திக்க வைத்தது.
- நான் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். தேவன் எனக்கு ஜெபிக்கும் இருதயத்தைக் கொடுத்தார். இப்போது என் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்துள்ளேன். நீங்கள் இதை மிகவும் அழகாக நடத்தினீர்கள்.
- இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. செய்தி நேரத்தில் இயேசு என்னுடன் பேசினார். இந்த மூன்று நாட்களில் நான் மாற்றமடைந்தேன்.
- என் வாழ்க்கைக்கு இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இது என் எதிர்கால வாழ்க்கை முடிவுகளை மாற்றும் என்று நான் உணர்ந்தேன். இந்த மூன்று நாட்களில் நான் பல நல்ல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்; அது என் பிரச்சனைகளை தீர்க்க உதவியது. நான் என்னை முழுவதும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தேன்.
- இந்த முகாமில் நல்ல ஆலோசனைகள் கிடைத்தது. Mobile பயன்பாட்டைக் கட்டுப்படுத்த உதவியது. கடவுளுக்குள் இன்னும் அதிகமாய் செயல்பட வேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டது. நீங்கள் இதைப் போல அநேக முகாம்கள் நடத்த வேண்டும்.
- இந்த 3 நாள் முகாம் எனக்கு மிகவும் பயனுள்ளதாயிருந்தது. என்னுடைய ஜெபத்திலே மிஷனெரிகளுக்காக இன்னும் அதிகமாக ஜெபிக்க வேண்டும் என்றும், பணித்தளத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆர்வமும் ஏற்பட்டது.
- இந்த முகாமில் குஜராத் குழு ஆடிய நடனம் மற்றும் மிஷனெரி பகிர்வு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த முகாமுக்கு அழைத்து வந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.
- முகாமின் ஒவ்வொரு Sessionயும் மிகவும் பிரயோஜனமாயிருந்தது. நான் பரிசுத்த வாழ்வில் வளரவும், கடவுளுடனான ஐக்கியத்தை இன்னும் அதிகப்படுத்தவும் மற்றும் ஊழியத்தைப் பற்றி அதிகமாய் தெரிந்துக் கொள்ளவும் முடிந்தது.
- இந்த 3 நாள் முகாம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. குஜராத் மாநிலத்திலிருந்து வந்த மிஷனெரி சொன்ன வார்த்தைகள் என்னைப் பாரப்படுத்தியது. இவர்களுக்காக நான் ஜெபிக்க முடிவெடுத்துள்ளேன்.
- இந்த 3 நாட்கள் உணவும், தங்கிய அறைகளும் மிகவும் நன்றாக இருந்தது. முகாமின் ஒவ்வொரு Sessionயும் மிகவும் அருமையாயிருந்தது. இந்த உலகம் என்னை மனச்சோர்வடைய செய்தது. ஆனால் இயேசுவே ஒளி என்பதை அறிந்து, அவர் விரும்பும் வாழ்க்கையை வாழ வேண்டுமென்று முடிவெடுத்துள்ளேன். முகாமை நடத்தின உங்களுக்கு நன்றி.









HANDLE WITH CARE

# BUILD ON THE RIGHT FOUNDATION

திருமணம் என்பது கடவுளின் பரிசு. ஆனால் உங்கள் வாழ்க்கை உணர்வுகளின் மீது அல்ல, கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது கட்டப்பட வேண்டும்.

மத்தேயு 7:24இன்படி "ஒரு ஞானி தன் வீட்டைக் கன்மலையின் மேல் கட்டுகிறான்" பிரியமானவர்களே! உங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் உங்கள் அடித்தளத்தைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் வாழ்க்கை இவற்றின் மீது கட்டமைக்கப்பட்டிருந்தால்...

- காதல் உணர்வுகள் மட்டுமே - அது சரிந்து விடும்
  Only romantic feelings - It will collapse
- பணம் அல்லது தொழில் மட்டுமே - அது அசைந்து ஆடிவிடும்
  Only money or career - It will shake
- தோற்றம் மற்றும் உற்சாகம் மட்டுமே - அது மங்கிவிடும்
  Only looks and excitement - It will fade

ஆனால் உங்கள் வாழ்க்கை இவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்படும்போது (3 G)...

- கடவுளின் நோக்கம் - God's Purpose
- கடவுளின் வார்த்தை - God's Word
- கடவுளின் நேரம் - God's Timing

உங்கள் திருமணம் எந்த புயலிலும் வலுவாக நிற்கும். வேதாகமமும் இதைதான் நமக்குக் கற்றுத் தருகிறது (மத். 7:24-27; லூக்கா 6:47-49).

**என்னிடத்தில் வந்து (Come)** என்ற வசனத்தின் மூலம் அவர் பாதத்தில் அமர்ந்து, அவரைத் தேடுங்கள். மத்தேயு 11:28இன்படி அவரிடத்தில் உங்கள் பாரங்களை, தேவைகளை, ஆசைகளை வைத்து விடுங்கள்.

**என் வார்த்தைகளைக் கேட்டு (Hear)** என்ற வேத வசனத்தின் மூலம் அவர் உங்களுக்கு என்ன சொல்கிறார் என்பதைக் கேளுங்கள். சங்கீதம் 32:8இன்படி அவர் உங்களுக்குப் போதிப்பார், நடக்க வேண்டிய வழியைக் காட்டுவார்.

**அவைகளின்படி செய்கிறவன் (Do) "அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள்". யாக்கோபு 1:22 "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்"**

(True obedience is not just words but deeds). கன்மலையின் மேல் கட்டப்பட்ட அஸ்திபாரம் - அசையாது லூக்கா 6:48; விழாது மத்தேயு 7:25.

திருமண வாழ்விற்குள் நுழைய பயத்தோடும், கேள்விகளோடும் மற்றும் கலக்கங்களோடும் நீங்கள் இருக்கலாம்.

**உங்களுக்கான ஆலோசனைகள்: (3 Will)**

**Perverted Will of God:**

தவறான நோக்கம், சுயத்தை மையமாகக் கொண்டு கர்த்தருடைய சித்தத்திற்கு மாறாக வாழ்க்கையை அமைப்பது.

**Permitted Will of God:**

எனக்கு, என் கண்களுக்கு, இந்த துணை தான் என் விருப்பம். இந்த விருப்பத்தை நிறைவேற்றி தாரும் என தேவ சித்தத்தைவிட்டு என் சித்தத்திற்கு தேவனை வளைப்பது.

**Perfect Will of God:**

கர்த்தருடைய பூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து உம் சித்தம் என் விருப்பம் என கையளித்து White Paperஇல் கையொப்பமிட்டு முழுமையாய் தேவனைச் சார்ந்து அவர் காட்டும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது.

இதில் நீ எதை Choose பண்ணுவாய்? ஜெபித்து ஆயத்தப்படு. தேவ வழி நடத்துதல் உனக்கு உண்டு.

*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)*

# மறைந்திருக்கும் பொக்கிஷம்

REV. K. KINGSLEY JOHN



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை இந்த சிறு கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பகுதியில் இன்றைய ராஜ்ய களம் என்ற தலைப்பை மையமாக வைத்து மறைந்திருக்கும் பொக்கிஷத்தின் உவமையை ஆழமாகத் தியானிப்போம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது உவமைகளால் சுவிசேஷத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினார். மத்தேயு நற்செய்தியில் 13ஆம் அதிகாரத்தில், அவர் "ராஜ்ய உவமைகள்" என்று அழைக்கப்படும் ஏழு உவமைகளைச் சொல்லுகிறார். இவற்றில் முதன்மையான உவமை "மறைந்திருக்கும் பொக்கிஷம்". "பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக்கொள்ளுகிறான்" (மத்தேயு 13:44). இந்த உவமை சுவிசேஷ ராஜ்யத்தின் மதிப்பையும், அதற்காகத் தயாராகும் பலியையும் விளக்குகிறது. இந்த வேத பகுதியின் கீழ், இந்த உவமையின் அர்த்தத்தை ஆழமாகப் புரிந்துகொண்டு, நம் தினசரி வாழ்க்கையில் அதைப் பயன்படுத்துவோம்.

## உவமையின் விளக்கம்:

இந்த உவமையில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன:

- **மறைந்த பொக்கிஷம்:** பொக்கிஷம் நிலத்தில் மறைந்திருந்தது. அதேபோல், சுவிசேஷ ராஜ்யம் உலகின் கண்களுக்கு மறைந்திருக்கிறது. பலர் அதை அறியாமலேயே வாழ்கின்றனர். ஆனால், இயேசு கிறிஸ்துவில் அது கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த புதைபொருள் ஞானம், மனமாற்றம் மற்றும் சமாதானத்தைத் தருகிறது.
- **மகிழ்ச்சியுடன் கண்டுபிடித்தவன்:** மனிதன் பொக்கிஷத்தைக் கண்டதும் மகிழ்ச்சியால் நிரம்பினான். சுவிசேஷ ராஜ்யத்தைக் கண்டவர்கள் அப்படியே சமாதானமும், ஆனந்தமும் அடைகிறார்கள்.
- **தன் எல்லாவற்றையும் விற்று வாங்குதல்:** மனிதன் தன் எல்லா சொத்தையும் விற்று பொக்கிஷத்தைப் பெற்றான். இது ராஜ்யத்திற்கு தேவையான பலியைக் குறிக்கிறது. இயேசு கூறுகிறார் "என் நாமத்துக்காக வீடுகள், சகோதர, சகோதரி, தந்தை, தாய், பிள்ளைகள் மற்றும் தனக்குள்ள ஆஸ்தி எல்லாவற்றையும் விட்டு என்னைப் பின்தொடர்கிறவன் சகல ஆசீர்வாதங்களையும் நூறு மடங்கு பெறுவான். கர்த்தர் அவரிடமிருந்து பாவத்தினால் பிரிந்து போன நம்மை, அவருடைய நித்திய இராஜ்யத்திற்குள் சேர்க்க தேடி கண்டுபிடித்து மகிழ்கிறார்.

## நம் வாழ்க்கையின் பயன்பாடு

இன்றைய உலகில், பொக்கிஷத்தைக் கண்டுபிடிப்பது சவாலானது. உலகில் பணம், புகழ் போன்றவை மக்களை ஈர்க்கின்றன. ஆனால் சிலர் தன்னார்வமாய் கிறிஸ்துவின் பணிக்காக தங்களுடைய வேலை, சொந்தங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்துவை தேர்ந்தெடுத்து அவருடைய பணியைச் செய்வதில் மகிழ்ந்தவர்கள் அநேகர்.

- தினசரி தேடல்: பைபிள் வாசிப்பு, ஜெபம் மூலம் தேவ ராஜ்யத்தைத் தேடுங்கள் (மத்தேயு 6:33).
- தயாராக இருத்தல்: பாவங்களை விட்டு, கர்த்தருடைய பணியில் ஈடுபடுங்கள்.
- மற்றவர்களுடன் பகிர்தல்: பரலோக ராஜ்யமாகிய பொக்கிஷத்தைக் காட்டி, மற்றவர்களையும் அழையுங்கள்.

## முடிவுரை

மறைந்திருக்கும் பொக்கிஷமாகிய சுவிசேஷ ராஜ்யம் உங்கள் வாழ்க்கையை மாற்றும். அதைக் கண்டுபிடித்து, எல்லாவற்றையும் விட்டுவிட்டு மறைந்திருக்கும் பொக்கிஷத்தைப் பெற தயாராக இருங்கள். ஆண்டவராகிய இயேசு தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதித்து நன்மையான காரியங்களை உங்கள் வாழ்விலே செய்து வழிநடத்துவராக. ஆமென்!



# கனம் பெற்ற மொர்தெகாய்...

வரலாற்று ஏடுகள் வாழ்த்திய பெருமகான்..
சூசானிலே வாழ்ந்து வந்த சூத்திரதாரி,
பென்யமீன் கோத்திரத்து யூதன்,
பெறாத பிள்ளைக்குத் தகப்பனாகிய கருணாகரன்,
கனவிலும் அவளைச்சுமந்த தாயுமானவன்,
ஆலோசனையின் சக்கரவர்த்தி, கடமை தவறாத காவலன்,
சத்துருவின் சதிக்குத் துணைப் போகா உத்தமன்,
செய்த நன்மைக்குப் பிரதிபலன் எதிர்நோக்காப் பிதாமகன்,
காலம் கனிவதற்குக் கருத்தாய்க் காத்திருந்த காரியகர்த்தன்.

மரணத்தைச் சுமந்து வந்த பேராபத்து,
பயணத்திற்கு விடை சொன்ன பாதையின் முடிவு,
மனித பலம் கொணராத மாற்றம்,
ஊன் உயிர் ஒடுக்கி உன்னதம் நோக்கிய மனந்திரும்புதலும்,
கசடு நீக்கிய மாசற்ற மனதும்,
மாதேவனின் மாறாத கிருபையும் பரிசளித்த 'மறுவாழ்வு'
இது மாற்றம் இல்லாத 'நிஜவாழ்வு'.

விசுவாசமும், விண்ணவரின் அடையாளமும்,
சத்துருவின் சதித் திட்டங்களுக்கு என்றும் தலை வணங்காது,
சிலை விரும்பிகளின் அடிவருடக் கிஞ்சித்தும் எண்ணம் எழும்பாது.

திசைமாறாத் தேவத் திட்டங்கள்
ஈடேறா எதிரியின் எண்ணங்கள்,
தூக்குக் கயிற்றுக்கும் விடுமுறை,
துன்பத்தின் தொல்லைக்கும் விடுதலை,
பரலோகதேவனின் பராக்கிரமச் செயல்,
தலைக்கு வந்தது தலைமுடிக்குக் கனமானது.

உயர்வும் கனமும் கர்த்தரால் உண்டாகும்,
வளமும் வாழ்வும் நித்தியரால் செழுமை பெறும்,
கர்த்தரின் கணக்கு என்றும் பிழையாகாது..!
சத்திய வேதம் என்றும் தோல்விக் காணாது!

ஆணவம் இல்லா அதிகாரம்
தன்னலம் பேணா உதாரம்,
சேவகனாய்ச் சிந்தை தாழ்த்தி,
ஐம்புலனையும் அவருக்காய்ப் பட்டயமெழுதி,
விண்மைந்தனுக்காய்ச் சிலுவையின் கொடி உயர்த்தி,
அழிவைத் தடுத்திடும் மேதகு மொர்தெகாய்களாய்
எக்காளச் சத்தம் கேட்டு எழும்புங்கள் தேவஜனமே!
அறுவடைக்கு விரையுங்கள் உன்னத ஜனமே!

மொர்தெகாயின் முத்தான முன்மாதிரிகளே!
விழுந்த உலகிற்கு விலைபோகாத இளம் சிற்பிகளே!
விண்மகன் மெச்சும் உத்தமம் காத்திட
யுகங்கள் பேசும் சரித்திரம் புரிந்திட
விளம்பரமில்லா ஊழியம் செய்திட
விரையுங்கள்... பணிக்களம் சென்று சூளுரையுங்கள் !



REV. ALBERT PRABHAKARAN

# இயேசு கிறிஸ்துவின் சீஷன் அந்திரேயா



### அப்போஸ்தலர் அந்திரேயா

அப்போஸ்தலர் அந்திரேயா பெத்சாயிதா என்னும் இடத்தில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். "அந்திரேயா" என்ற பெயரின் அர்த்தம் "துணிவானவன்".

### இயேசு கிறிஸ்துவுக்காக மனிதர்களைப் பிடித்த மீனவன் அந்திரேயா

ஆரம்பத்தில், அந்திரேயா யோவான் ஸ்நானகனின் சீஷனாக இருந்தான் (யோவான் 1:40-42). ஒரு வகையில், அவர் யோவான் ஸ்நானகனின் பணியைத் தொடர்ந்து நடத்தியவன் எனலாம். இயேசு தேர்ந்தெடுத்த முதல் அப்போஸ்தலர் அந்திரேயாவே. இவர் சீமோன் பேதுருவின் சகோதரன். சீமோனும், அந்திரேயாவும் கலிலேயாவில் மீனவர்களாக இருந்தனர். சுவாரஸ்யமாக, இருவரையும் இயேசு ஒன்றாகவே "மனிதர்களைப் பிடிக்கும் மீனவர்கள்" ஆக அழைத்தார். பின்னர், அந்திரேயா பிலிப்புவை இயேசுவிடம் அறிமுகப்படுத்தினார்.

### இயேசு கிறிஸ்துவுடன் நெருக்கமாக நடந்த அந்திரேயா

அந்திரேயா முதலில் இயேசுவை மேசியாவாக அறிந்து, அந்த நற்செய்தியை தனது சகோதரன் சீமோன் பேதுருவிடம் பகிர்ந்தான். மேலும், இந்த இரு சகோதரர்களும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் நெருங்கிய துணையாளர்களாக இருந்தனர். ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் கொண்ட சிறுவனை இயேசுவிடம் அறிமுகப்படுத்தியது அந்திரேயாவே. கிரேக்கர்களையும் இயேசுவிடம் கொண்டு வந்தான். ஒலிவமலை மீது இயேசுவின் வருகை, உலகத்தின் முடிவு குறித்து கேட்கும்போது அவருடன் இருந்தார். கடைசி இரவு உணவிலும் கலந்து கொண்டார்.

### இயேசு கிறிஸ்துவின் சீஷனாக அந்திரேயா

அந்திரேயாவின் பெயர் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. சுமார் இரண்டரை ஆண்டுகள் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைத் தொடர்ந்து கற்றார். அப்போஸ்தலர் செயல்கள் புத்தகத்திலும் அவர் அப்போஸ்தலராகக் குறிப்பிடப்படுகிறார்.

### இயேசு கிறிஸ்துவுக்காக அந்திரேயாவின் ஊழியம்

யூசேபியசின் பதிவின்படி, அந்திரேயா ஸ்கிதியா (இன்றைய தென் ரஷ்யா, கருங்கடல் சுற்றிய பகுதி சென்றார். ரோமாவின் ஹிப்பொலிடஸ் கூறுவதன்படி, அவர் திரேசியாவில் (இன்றைய பல்கேரியா – பால்கன் தீபகற்பத்தின் கிழக்கு பகுதி; மேலும் இன்றைய கிரீஸ் மற்றும் துருக்கியின் சில பகுதிகள்) பிரசங்கித்தார். அந்திரேயாவின் செயல்கள் என்ற அப்போகிரிபா நூலில், பைசாந்தியம் (இன்றைய இஸ்தான்புல், துருக்கி) பகுதியில் அவரின் இருப்பு குறிப்பிடப்படுகிறது. மரபுப்படி, கி.பி. 38ஆம் ஆண்டு அவர் பைசாந்தியத்தின் ஆசனத்தை நிறுவி, ஸ்தாகீசை ஆயராக நியமித்தார்.

### இயேசு கிறிஸ்துவுக்காக சாட்சியாக மரித்த அந்திரேயா

புனித அந்திரேயாவின் இரத்த சாட்சிகளின் நூலின்படி, அவர் ஸ்கிதியாவில் கல்லெறிந்து சிலுவையில் அறையப்பட்டார். மரபுப்படி, கி.பி. 60 நவம்பர் 30ஆம் நாள் அளவில், கிரீஸின் பத்ராஸ் நகரில், ஆளுநரின் மனைவி உட்பட பலரை மனமாற்றம் செய்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு, X-வடிவ சிலுவையில் அறையப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். இயேசு மரித்த அதே வகை சிலுவையில் மரிக்கத் தகுதி இல்லை என்று எண்ணி, அப்படிப்பட்ட சிலுவையை அவர் கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

### சுவிசேஷப் பணிக்கான மாதிரியாக அந்திரேயா

இயேசு கிறிஸ்துவே வரவிருக்கும் மேசியா என்பதை அந்திரேயா உறுதியாக அறிந்து, எந்தத் தயக்கமும் இன்றி அவரைப் பின்தொடர்ந்தான். இயேசுவுடன் நடந்து, அவரது ஊழியத்தில் முழுமையாக ஈடுபட்டான். தனிநபர்களைக் கவனித்து, இயேசுவை அவர்களுக்கு அறிமுகப்படுத்திய விதம் வேதாகமத்தில் குறிப்பிடத்தக்கது. தனது வீட்டிலிருந்து தொடங்கி, தன் மக்களிடம் இயேசுவைப் பகிர்ந்தார்.

தனிப்பட்ட சுவிசேஷப் பணிக்கான சிறந்த மாதிரியும், ஊழியத்தில் சிறந்த தொடர்பாளரும் அந்திரேயாவே. இவர் அனைத்தையும் விட்டு யேசுவைப் பின்தொடர்ந்தார்.

### FMPBஇல் அந்திரேயாவின் வாழ்க்கைமுறை

அன்புள்ள வாலிப தம்பி, தங்கைகளே, அந்திரேயாவின் இரத்தம் இன்னும் பேசுகிறது. இயேசு கிறிஸ்துவுக்காக வாழுமாறு நம்மை வேண்டுகிறது. ஜீவனுள்ள தேவனையும், விண்ணகத்திற்கான வழியையும் அறிய பலர் அலைகிறார்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கலாச்சார எல்லைகளைத் தாண்டி எடுத்துச் செல்லும் தொடர்பாளராக எங்களுடன் சேரலாம். ஊடகத் துறையினராக, வாட்ஸ்அப், சிறு நாடகங்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தலாம்.

இயேசு கிறிஸ்துவுக்காக வாழுங்கள்; உங்கள் வாழ்க்கையை அர்ப்பணியுங்கள். கர்த்தருடைய பணியில் இணைந்து அவருக்காக வாழுங்கள்!

**friends missionary prayer band**

தேவனின் இதயத்துடிப்பு

# யாரை நான் அனுப்புவேன்?

தேவனின் இதயத்துடிப்பே ஆத்தும அறுவடை...
இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்கு
அடிபணிய விரும்புகிறீர்களா?
மக்களுக்குப் பணிசெய்து,
தேவ பணியை நிறைவேற்றிட,
உங்களுக்கு ஒரு வாய்ப்பு!

**MISSIONARY WANTED MISSIONARY**

**FMPB குடும்பத்தில் இணைந்திட வாரீர்!**

**ஊழியர்கள் தேவை!**

அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?



**கலாச்சாரம் கடந்து சென்று ஊழியம் செய்திட உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**

**ஊழியர் நேர்முகத் தேர்வு:**

தகுதி - குறைந்த பட்சம் 12ஆம் வகுப்பு / அதற்கு மேல்
வயது - திருமணமாகாதவர்கள் 18 - 30 வயது / திருமணமானவர்கள் 35 வயது
இடம் - நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, தலைமை செயலகம், 29, உயர் நிலைப்பள்ளி, அம்பத்தூர், சென்னை - 600 053.
நாள்- 21.02.2026 சனிக்கிழமை
நேரம் - காலை 8.00 மணி

**IF YOU WISH TO BE A**

- முன்னோடி ஊழியனாக
- சபைநாட்டும் ஊழியம் செய்ய
- வேதாகம மொழி பெயர்ப்பாளராக
- மிஷனெரி ஆசிரியராக
- மிஷனெரி மருத்துவராக
- சிறுவர் ஊழியம் செய்திட
- வாலிபர் மத்தியில் ஊழியம் நிறைவேற்றிட
- தொலைத் தொடர்பு ஊழியம் செய்திட



# God Is Calling.

»will you answer?

**HUMAN RESOURCES DEPARTMENT**
9, HIGH SCHOOL ROAD, AMBATTUR, CHENNAI – 53.
email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 26573353

தொடர்புக்கு - 044-2657 0404 / 80731 30527

---

**மறக்கமுடியாத மாமனிதர்கள்**

# உங்கள் கையில் உள்ளதா?



# இப்பொழுது விற்பனையில்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடுகள்**

**வாங்கிப் பயன்பெறுங்கள்!**

திருச்சபை சந்திக்கும் சவால்களை அலசி ஆராய இந்த புதிய வெளியீட்டை வாங்கிப் பயன்பெறுங்கள்



உலகமெங்கும் தேவ பணியினை நிறைவேற்றிய 50 மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு பாகம் – 1
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 73 மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு பாகம் – 2 ஆகியவை

**மறக்கமுடியாத மாமனிதர்கள்** என்ற தலைப்பில் வெளியீட்டுள்ளோம்.
**FMPB-யின் மைல் கற்கள்** மாபெரும் அறுவடை என்ற தலைப்பிலும் கிடைக்கும்.

